சுத்தத்திற்கும் சுவைக்கும்
புகழ்பெற்ற
சைவ ஹோட்டல்
தேவி விலாஸ்
சுத்தம், சுவை,
அன்பான உபசரிப்பு.
சைவ போசனகாரர்
மனதில் என்றும்
தேவி விலாஸ்
(வண்ணைச் சிவன்கோவில்
சந்தி)
288, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் 8 ★

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 சித்திரை 13 ஜ-ஆகிர் 9 இதழ் 75
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 25-4-80

அதி சிறந்த
இயந்திரமூலம்
போட்டோஸ்ரட்
பிரதிகள் செய்து
பெற்றுக் கொள்ள
பாரத் சென்ரர்
178, நவீன சந்தை
(புதிய கட்டிடம்
உள்பகுதி)
யாழ்ப்பாணம்.
போன்: 8265

### பொத்துவில் தொகுதியில் கனகரின் பதவி

# கூட்டணிக்கு உரியது அன்றேல்

# இடைத்தேர்தல் நடத்துக

## ஜனாதிபதிக்கு 'அமிர்' கடிதம்

(கொழும்பு)

**பொத்துவில் தொகுதிக்கு, புதிய எம். பி.யைத் தெரிவு செய்யத் தமிழர் விடுதலை முன்னணிக்கு அனுமதி அளியுங்கள். இன்றேல் அத்தொகுதி மக்களின் கருத்தை அறிய இடைத தேர்தல் நடத்துங்கள்:**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் ஜனாதிபதி திரு ஜே, ஆர். ஜெயவர்த்தனவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

பொத்துவில் 2 வது எம். பி. திரு. எம். கனகரத்தினம் காலமானதை அடுத்து காலியாகியுள்ள பொத்துவில் தொகுத உறுப்பினர் பதவி குறித்து திரு. அமிர்தலிங்கம் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1977ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஐக்கியதேசியக் கட்சியும் போட்டியிட்டு இரு கட்சிகளுமே வெற்றியீட்டின. அத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்த மக்கள் அக்கட்சி வேட்பாளருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரிக்கும் மக்கள் திரு. கனகரத்தினத்திற்கும் தமது வாக்குகளை அளித்தனர். எனவே திரு. கனகரத்தினத்திற்குக் கிடைத்த வாக்குகள் அவருக்குக்கிடைத்த தனிப்பட்ட வாக்குகள் என்று கூறிவிடமுடியாது.

பொத்துவில் தொகுதியைச் சேர்ந்த ஒரு பகுதி மக்கள ஐக்கியதேசியக் கட்சிக்கும் இன்னுமொருசாரார் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தமது வாக்குகளை அளித்தனர். இப்போது இரட்டை அங்கத்தவர் தொகுதியான பொத்துவிலில் ஐ. தே. க. உறுப்பினர் ஒருவர் இருக்கிறார். எனவே எந்தவிதத்திலும் அத்தொகுதி மக்களின் தீர்ப்பின்படி 2வது எம் பி யாக தமிழர்விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஒருவரே இருக்கவேண்டும்.

இன்றைய அரசியல் அமைப்பின்படி ஐக்கியதேசியக் கட்சியே பொத்துவில் தொகுதியின் 2வது உறுப்பினரைத் தெரிவு செய்யும் எனஎதிர்பார்க்கப்படுகிறது. [ம-இ]

## பாராளுமன்றத்தில் கனகருக்கு அனுதாபம்

[கொழும்பு]

மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் திரு எம். கனகரத்தினத்தின் மறைவையொட்டிப் பாராளுமன்றத்தில் அனுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

அரசின் சார்பில் பாராளுமன்ற அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் திரு வின்சன்ற் பெரேரா கொண்டுவந்த இத்தீர்மானம் மீது சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்ற விவாதத்தில் பிரதமர் திரு ஆர். பிரேமதாசா, எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம், பிராந்திய அபிவிருந்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை ஆகியோர் அனுதாப உரை நிகழ்த்தினார்கள். [ம-இ]

## வேக நடை சாதனை முயற்சி

(மட்டுவில்)

வேகநடையில் உலக சாதனையை எட்டும் முயற்சியில் கொடிகாமத்தைச் சேர்ந்த ப. கணேசு என்ற வாலிபர் ஈடுபட்டுள்ளார்.

கொடிகாமம் இளைஞர் ஒன்றியத்தின் ஆதரவில் கொடிகாமம் மகாவித்தியாலயத்தில் இம்மாதம் 22ம் திகதி மாலை 6 மணி 4 நிமிடத்திற்கு தமது சாதனை முயற்சியை ஆரம்பித்த கணேசு நேற்றிரவு 8 மணிவரை 175 மைல்களைக் கடந்துள்ளார்.

## ஜூலை 22-ல் திறந்தவெளிப் பல்கலைக்கழகம்

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்து மூன்றாண்டுகள் பூர்த்தியாகும் ஜூலை மாதம் 22ம் திகதி திறந்த வெளிப் பல்கலைக்கழகமும் செயல்படத் தொடங்கும்.

இத்திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தில்முதலில் 7500 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் வருட முடிவில் இவர்களின் தொகை 11 ஆயிரமாக அதிகரிக்கப்படும்.

திறந்தவெளிப் பல்கலைக்கழகம் சம்பந்தமான விபரங்களை தயாரிப்பதில் இப்பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் பி. டி. குலதிலகா தலைமையிலான குழு ஈடுபட்டுள்ளது.

மகாவலித்திட்டம், சுதந்திர வர்த்தகவலயம்போன்ற பொருளாதார திட்டங்களுக்கேற்ப இப்பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப பயிற்சியளிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

இப்பல்கலைக் கழகத்திற்கான உதவியை சுவீடன் சர்வதேச அபிவிருத்தி ஸ்தாபனமும், யுனெஸ்கோவும் வழங்கவுள்ளன. (வெ)

## இந்திரா கொலை முயற்சி வழக்கு

புதுடில்லி ஏப் 24

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கொலைமுயற்சி தொடர்பாக காவலில் வைக்கப்பட்டிருந்த பரோடா நகர பிரதி மேயர் உட்பட ஐந்து பேரும் டில்லி உயர்நீதிமன்றத்தினால் பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பரோடா, நீதிமன்றத்தில் ஆஜராவதாக உறுதியளித்த தன்பேரிலேயே இவர்கள் ஐவரும் தலா 5 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். [இ]

## 6 கோடி ரூபா செலவில் மருந்து உற்பத்திச்சாலை

(கொழும்பு)

5 கோடியே 94லட்சம் ரூபா செலவில் பாரிஸ் மருந்து உற்பத்திச் சாலையொன்றை நிறுவ சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கான அங்கீகாரத்தை சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியாவிற்கு அமைசரவை வழங்கியுள்ளது.

இவ் உற்பத்தி தொழிற்சாலையை நிறுவுவதற்கான நிலம், கட்டிடம், உபகரணங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கு இத்தொகை பயன்படுத்தப்படுமெனவும் ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்தார்.

இம்மருந்து உற்பத்திச்சாலை இரத்மலானையில் அமைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார் இதனை நிறுவுவதற்கான நிலத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபை ஒதுக்கியுள்ளது.

சுவீடன் அரசாங்கத்தின் உதவியும் இவ்உற்பத்திசாலையை நிறுவுவதற்கு கிடைக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (வெ)

## பொலிசாரை விசாரிக்க பொலிஸ் உயர் குழு

(கொழும்பு)

பொலிசாருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்க விசேஷ பொலிஸ் குழுவொன்று சிரேஷ்ட உதவிப்பொலிஸ் மா அதிபர் தலைமையில் நியமிக்கப்படவுள்ளது.

உதவி பொலிஸ் மா அதிபர்களின் மாநாட்டில் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உதவிப் பொலிஸ் மா அதிபர் திரு எஸ். எஸ். ஜோசப்பை பொலிஸ் மா அதிபர் பணித்துள்ளார். பொலிஸ் அதிபர்கள், உதவிப் பொலிஸ்அதிபர்கள், பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாக இக்குழு அமையும்.

பொலிஸ் அதிகாரிகள் தமது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்துவருவதினாலேயே இக்குழுவை அமைக்கவேண்டி ஏற்பட்டதென பொலிஸ் அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

லஞ்ச ஆணையாளருடனும் இக்குழு கலந்தாலோசித்து பொலிஸாருக்கு எதிரான லஞ்சக் குற்றச்சாட்டுகள் பற்றியும் விசாரணை செய்யவுள்ளது. இதேவேளையில் நீர்கொழும்பு கரையோரமாவில் சினிமாத்தியேட்டரொன்று தீப்பிடித்து சேதமடைந்ததற்கு பொலிசாரே பொறுப்பு என்ற குற்றச்சாட்டு சம்பந்தமாக விசாரணை செய்ய பொலிஸ் தலைமைக்காரியாலயத்திலிருந்து குழுவொன்று ஸ்தலத்திற்கு விரைந்தது. (வெ-இ)

## இந்திய சட்டசபைத் தேர்தல் திடீர் ஒத்திவைப்பு!

புதுடில்லி, ஏப். 24

கலைக்கப்பட்ட ஒன்பது இந்திய மாநிலங்களின் சட்டசபைத் தேர்தல்களுக்கான திகதிகள் திடீரென மாற்றஞ் செய்யப்பட்டுள்ளன.

அடுத்த மாதம் 28, 31ம் திகதிகளில் தமிழ்நாடு உட்பட ஒன்பது மாநிலங்களுக்குமான சட்டசபைத் தேர்தல்கள் நடைபெறுமென இந்தியப் பிரதம தேர்தல் ஆணையாளர் திரு சக்தர் அறிவித்துள்ளார். மே மாதம் 27, 30ம் திகதிகளில் தேர்தல் நடைபெறமாட்டாதென்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லூர் சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலடி நல்லூர் மாக்கட்டுக்கு அருகாமையிற் புதிய வீடு 3½ பரப்பு காணியுடன் விற்பனைக்குண்டு தி.குமாரசாமி, 'தில்லைவாசா' நல்லூர் தபாற்கந்தோரடி, கல்வியங்காடு மார்கட்டுக்கு அருகாமையில், நல்லூர், யாழ்ப்பாணம். 5550

### தேவை

தியேட்டர் ஒபரேட்டரும் (Operator), புக்கிங்கிளார்க்கும் (Booking Clerk), உடன் தேவை. இரண்டு கடமைகளையும் செய்யக் கூடியவர் விரும்பத்தக்கது. சான்றிதழ் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். மோகன் சினிமா, உயிலங்குளம், மன்னார். 5557

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### இலங்கை.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் கல்விப் போதனை நிலையமொன்று செய்திப்பத்திரிகை விளம்பரங்களின் மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்காக அல்லது அதனுடன் இணைந்த இலங்கையின் சில பல்கலைக்கழகங்களின் வெளிவாரித் தேர்வுகளுக்குப் பாடநெறிகளை நடாத்திச் செல்கின்றது என்ற எண்ணத்தைக் கொடுத்துள்ளது என்பது எனது கவனத்திற்குக்கொண்டுவரப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அத்தகைய பாடநெறிகளை நடாத்துவதாகக் கருதப்படும் தனியார் நிறுவனம் எதனுடனும் யாதொரு தொடர்பினையும் கொண்டிருக்கவில்லை என்பதைப் பொது மக்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தற்போது எந்தவொரு வெளிவாரித் தேர்வையும் நடாத்துவதில்லை.

பேராசிரியர்
சு. வித்தியானந்தன்,
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

5582

இராமசுவாமி சதானந்தன்,
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்,
புலோலி தெற்கு,
புலோலி.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற முருகேசு பெரியதம்பி, துன்னாலை வடக்கு என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

விநாயகமூர்த்தி பெண் பரமேஸ்வரி, துன்னாலை வடக்கு, கரவெட்டி.

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 1090/T

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1980-ம் ஆண்டு வைகாசி மாதம் 23-ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் வேண்டப் பதிக்கப்படுகின்றனர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்

க. கணபதிப்பிள்ளை,

பதிவாளர்.

1980-ம் ஆண்டு பங்குனி மாதம் 18-ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது. 5552

## தசாக அழைப்பு

கடந்த 18-4-80 வெள்ளிக்கிழமை காலஞ்சென்ற எமது தாயார்

திருமதி சொர்ணம்மா ஐயாச்சாமிக் குருக்கள்

அவர்களின் பத்தாம் நாள் (தசாகம்) 27-4-80ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். தயவு செய்து இவ்வழைப்பை ஏற்று கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்
ஐ. ராசாக்குருக்களும்
சகோதரரும்.
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை. 5575

# மஹரகம ஆஸ்பத்திரியில் இப்படியும் ஒரு பயங்கரமா?

(புலோலி)

மஹரகம ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவந்த தனது மாமனாரைப் பார்ப்பதற்காக பருத்தித் துறையில் இருந்து சென்ற மருமகன், மாமனார் இறந்து அடக்கம் செய்யப்பட்டுவிட்டதை அறிந்து அதிர்ச்சியும் கவலையும் அடைந்தார்!

பருத்தித்துறையைச் சேர்ந்த பீ. இராசதுரை என்பவருக்கே இந்த அதிர்ச்சிச் சம்பவம் நிகழ்ந்துள்ளது!

இவர் கடந்த மாதம் 21ம் திகதி தனது மாமனாரான செல்வத்துரை நடராசா (50 வயது) என்பவரை, யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து புற்றுநோய்க்குச் சிகிச்சை பெறுவதற்காக மஹரகம ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்சென்று அனுமதித்திருந்தார். பின்னர், இம்மாதம் 7ம் திகதி, சிகிச்சைபெற்று வந்த மாமனார் தனது செலவுக்கு 150 ரூபா பணம் அனுப்பி வைக்குமாறு கடிதம் அனுப்பி வைத்ததற்கிணங்க மருமகன் 10ம் திகதி 150 ரூபா பணத்தையும் அனுப்பிவைத்திருந்தார். இதனையடுத்து இம்மாதம் 21ம் திகதி தனது மாமனாரைப் பார்ப்பதற்காக மஹரகம ஆஸ்பத்திரிக்குச் சென்று தேடிய போது அவரைக் காணாது மருமகன் விசாரணைசெய்ததில், கடந்த 17ம் திகதி அவர் இறந்துவிட்டதாகவும், சடலம் அடக்கம்செய்யப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தனது மாமனாரான நடராசா இறந்தது பற்றி தனக்கு அறிவிக்கப்படாதது குறித்து மஹரகம ஆஸ்பத்திரி அதிகாரிகளை விசாரித்தபோது, இச் சம்பவம் தொடர்பாக தந்தி எழுதப்பட்டதாகவும் ஆனை தபாற் கந்தோரில் அத் தந்தி சேர்க்கப்படவில்லை என்பதையும் அறிந்துகொண்டாராம்.

ஆஸ்பத்திரி ஊழியர்களின் கவலையீனம் பற்றி இராசதுரை ஜனாதிபதிக்கும், சுகாதார அமைச்சருக்கும் முறையிட்டுள்ளார்.

## தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி மேதின ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் நடைபெற விருப்பது போன்று, யாழ் நகரிலும் ஒன்பது பெரிய தொழிற்சங்கங்கள் இணைந்துள்ள தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியின் ஐக்கிய மேதின ஊர்வலம், பொதுக்கூட்டம் பிரமாண்டமான முறையில் நடைபெறவிருக்கிறது.

ஊர்வலம் நல்லூர் கல்யாண மண்டபத்திலிருந்து பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி அரசடி வீதி, பலாலி வீதி, ஆரிய குளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி பஸ்நிலையச் சந்தி, முனீஸ்வரன் வீதி ஊடாக யாழ். திறந்த வெளியரங்கையடையவிருக்கிறது. திறந்தவெளியரங்கில் திரு. எஸ். விஜயானந்தன் தலைமையில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (சண் தலைமை) கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ சார்பு), நவலங்கா சமசமாஜக் கட்சி ஆகியவற்றின் கட்டுப்பாட்டிலுள்ள தொழிற்சங்கங்களையும் மற்றும் இலங்கை வர்த்தக ஊழியர்சங்கம், அரசாங்க லிகிதர்சேவைச் சங்கம், தேசிய ஆசிரியர்சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், அரசாங்க பொதுச் சேவை ஊழியர் சங்கம், அரசாங்க தொழில்நுட்ப ஊழியர்சங்கம் ஆகியவற்றையும் சேர்ந்த திருவாளர்கள் வி. வண்டலன், எம். ஏ. சி. இக்பால், பொன் குமாரசாமி, எஸ். நடராசா, குமார் டேவிட், ஆர். பானுதேவன், வே. பொன்னம்பலம், கே. கிருஷ்ணபிள்ளை, எஸ். கே. சுந்தரலிங்கம், ஜே. ஏ. கே. பெரேரா ஆகியோருட்படப் பலர் உரை நிகழ்த்துவார்.

## மலிவு விற்பனை

### தேக்கு மரம்

அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் பின்வரும் மரக்காலைகளில் தேக்கு மரம் தற்போதைய விற்பனைவிலையிலும் பார்க்க 30% கழிவுடன் உத்தரவுப் பத்திரமின்றி விற்பனை செய்யப்படும் இச்சலுகை 1980-05-17-ந் திகதி வரை மட்டுமே வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் மரக்காலை
சங்கானை மரக்காலை
பருத்தித்துறை மரக்காலை

பிரதேச முகாமையாளர்,
(வடபிராந்தியம்)
அரசாங்க
மரக் கூட்டுத்
தாபனம்,
இல. 25, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
1980-04-24. (5579)

## மாதிரிக் கிராமத்துக்கு 'திருப்பரங்குன்றம்' பெயர்

(புலோலி)

பருத்தித்துறைத் தொகுதியில் மாதிரிக் கிராமமாகத் தெரிவுசெய்யப்பட்ட அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலடி மாதிரிக் கிராமத்திற்கு, "திருப்பரங்குன்றம்" என்று பெயர் சூட்டுவதற்கு பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் சிபார்சு செய்துள்ளார்.

இம் மாதிரிக் கிராமத்தில் முதற்கட்டமாக 50 வீடுகள் கட்டப்பட்டு வீடற்ற ஏழைகள் குடியமர்த்தப்படுவார்கள். இம்மாதிரிக் கிராமத்திற்கு சுகாதார வசதிகள் குடிநீர் வசதிகள் மின்சாரவசதிகள் உட்பட சகல வசதிகளும் வழங்கப்படவுள்ளன.

இம்மாதிரிக் கிராமத்தில் குடியேற விரும்புபவர்கள் இக் கிராமத்திலிருந்து இரண்டு மைல்களுக்குள் வசிப்பவராகவும், 20 மைல்களுக்குள் வீடுகளோ காணியோ இல்லாதவர்களாகவும் இருக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக் கிராமத்தில் குடியேறத் தகுதியுள்ளவர்கள் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபருக்கு விண்ணப்பிக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அறிவித்தல்

சர்வோதய இயக்கத்தின் யாழ். மாவட்ட நிலையத்தில் கொள்வனவு ஊழியராகக் கடமை யாற்றிய புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் 6-ம் வட்டாரத்தில் வசிப்பவருமான பரநிருபசிங்கம் துரைசிங்கம் என்பவர் 20-04-80 தொடக்கம் தமது கடமைக்கு வராமல் விட்டமையால் அவர் தமது கடமையிலிருந்து விலகிக் கொண்டாரென நாம் கருதுகின்றோம்.

ஆதலால் 20-04-80 தொடக்கம் அவருக்கும் எமது இயக்கக்கடமைகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்பதை எம்மோடு தொடர்புடைய சகல தாபனங்களுக்கும் எமது கிராமோதய நிலையங்களுக்கும் சர்வோதய ஊழியர்களுக்கும் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றோம்.

க. திருநாவுக்கரசு,
அமைப்பாளர்,
சர்வோதயம்
யாழ் மாவட்டம்.
5584

### முகாமையாளர்

## தேவை

புங்குடுதீவு சர்வோதய வர்த்தக ஒன்றியத்தின் பிரதான கிளைக்கு வியாபார அனுபவமும் நிர்வாகத் திறமையும் கொண்ட முகாமையாளர் ஒருவர் தேவை. கல்வித் தகைமைகளுடனும் நற்சான்றிதழ்களுடனும் 30-4-80க்கு முன் விண்ணப்பிக்கவும். தகுதி அடிப்படையில் வேதனமும் ஏனைய வசதிகளும் அளிக்கப்படும். கூட்டுறவுத்துறையில் அனுபவம் வாய்ந்தவர்களாயின் அவர்கட்கு முன் உரிமை வழங்கப்படும்.

க. திருநாவுக்கரசு,
சர்வோதய
யாழ் மாவட்ட
அமைப்பாளர்,
புங்குடுதீவு.
5583

## மருந்துக் கலவையாளர் பிரச்சனைகள்

(பண்டத்தரிப்பு)

அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ். மாவட்ட கிளையின் பிரதிநிதிகள் யாழ் மாவட்டத்திலுள்ள மருந்துக் கலவையாளர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனைகள் குறித்து இம்மாதம் 28ம் திகதி யாழ். மாவட்டத்திலுள்ள சுகாதார சேவை அதியட்சகரை நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர்.

## Wanted Typist

Wanted immediately an experienced English Typist. Pensioners can also apply Salary negotiable. Apply before 30th April 1980 to:

THE MANAGING DIRECTOR,
The Jaffna Co-operative Stores Ltd.,
420, Hospital Road, Jaffna. 5578

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## இல்லத்தரசிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

வீட்டுப் பாவனைக்குகந்த சகல விதமான உலோக மட்பாண்டப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்று மின்சார நிலைய வீதியில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளது.

உங்கள் தேவைகளை இன்றே பூர்த்தி செய்யுங்கள்

பொது முகாமையாளர்
யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
74/3, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
22-04-'80.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

எவன் தன் குரோதத்தை அடக்கியுள்ளானோ, எவன் தன் அகந்தையை நீக்கியுள்ளானோ, எவன் ஒன்றிலும் பற்று வைத்திருக்கவில்லையோ, எவன் ஒன்றையும் தன் சொந்தம் என்று கருதவில்லையோ அவனுக்கு யாதும் துன்பமோ துயரமோ தண்டமோ சம்பவியாது.

—சுவாமி சிவானந்தர்

## மக்கள் கருத்து

### எத்தனைகாலம் இந்நிலைமை?

இலங்கைத் தீவைச் சூழவுள்ள கடற்கரைகளை கடல் அரிப்புகளில் இருந்து பாதுகாக்க அரசாங்கம் எடுத்து வரும் தீவிர நடவடிக்கைகளைப் பாராட்டுகிறோம். நெடுந்தீவு இலங்கைக்குச் சொந்தமான தீவாக இருந்தும் அதனைச் சூழவுள்ள கடற்கரைகளை கடல் அரிப்பினின்று பாதுகாக்க எதுவித நடவடிக்கையும் இற்றைவரை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

நெடுந்தீவின் வடக்குக் கரையோரப் பகுதிகளில் ஏறக்குறைய 300 மீனவர்கள் வாழ்கின்றனர். இவர்கள் தம்முடைய தொழிலைப்பொறுத்தமட்டில் நிச்சயமாகக் கரையோரப் பகுதிகளிலேயே சீவிக்கவேண்டியிருக்கிறது. வாடைக் காற்றுக் காலங்களில் ஏற்படும் பெரும் கடற்பெருக்கினால் மேற்படி குடும்பங்கள் பாதிக்கப்பட்டு வேறு இடங்களில் தஞ்சம் அடைகின்றனர். வருடா வருடம் மாரிகாலங்களில் இந்நிலை இம் மீனவர்களுக்கு அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதனால் நிம்மதியான தொழில் இல்லாமல் பெரும் கஷ்டம் அடைகின்றனர். இந்நிலை தொடர்ந்து நீடிக்குமானால் இவர்களின் வாழ்க்கைநிலை பெரிதும் பாதிப்படையும். இதனைப்பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தும் இவர்களின் நிலை துர்ப்பாக்கியமே.

இனியாவது இந்த மீனவ மக்களைக் கடல்அரிப்பினின்று காப்பாற்ற அவர்களுக்குப் பூரண நிவாரணம் வழங்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று கரையோரத்தில் வாழும் ஏழை மீனவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

க. ருஜக்கோன்
குருநகர்
நெடுந்தீவு.

### ஊழியர் பிரதிநிதி சேர்க்கப்படுவர்

(தெல்லியடி)

அச்சுவேலி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச்சங்கம், அதன் இயக்குநர் சபையில் ஊழியர் பிரதிநிதியொருவரைச் சேர்த்துக் கொள்ள தீர்மானித்துள்ளது. திரு. வி. நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (அ)

### கும்பாபிஷேகம்

(அரியாலை)

கோப்பாய் தெற்கு தனிப்பனை வீரபத்திரசுவாமி கோவில் மகாகும்பாபிஷேகம் இம் மாதம் 28ம் திகதி திங்கள் காலை நடைபெறவிருக்கிறது.

நல்லூர் சிவஸ்ரீ சு குமார சாமிக்குருக்கள் தலைமையில் சிவஸ்ரீ கு. கலாபூஷணக்குருக்கள் கும்பாபிஷேகத்தை நடாத்துவார். (அ)

# தனித்துவமிக்க ஒரு தலைவர் மார்ஷல் டிட்டோ

அரசியல் ஞானியும், ராஜதந்திரியும், சமாதான புருஷருமான தலைவர் மார்ஷல் டிட்டோ, நோய்வாய்ப்பட்டு மரணத்தறுவாயிலிருக்கும் இவ்வேளையில், அவர் தமது நாட்டிற்கும் உலகிற்கும் ஆற்றிய துணிச்சல்மிக்க சாதனைகளை நினைவுகூருதல் பொருத்தமானதாகும். குறிப்பாக அவர் யூகோஸ்லேவிய நாட்டினை வல்லரசுகளின் இரும்புக்கரங்களிலிருந்து காப்பாற்றுவதற்காக அவர் ஆற்றிய அரும்பணிகளும் அணிசேரா நாடுகளின் தனித்துவம் பாதுகாக்கப்படுவதில் அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் என்றென்றும் போற்றத்தக்கன.

தன்னுரிமைகொண்ட இரண்டு பிரதேசங்கள் உட்பட 8 சமஷ்டி மாநிலங்களை அடக்கிய இக் குடியரசை அமைத்து, எல்லா மாநிலங்களுக்கும் சம அந்தஸ்தும் உரிமைகளும் வழங்கி தம் நாட்டுக்கு உகந்த சோஷலிஸப் பாதையை தேர்ந்தெடுத்தமை டிட்டோவின் துணிச்சலான, தீர்க்கதரிசனம்மிக்க அரசியல் ஞானத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

**எஸ். எஸ். சண்முகநாதன்**
(பி. ஏ. சிறப்பு)

1892ம் ஆண்டு மே மாதம் 7ந் திகதி கிராமப்புறம் ஒன்றில், பின்தங்கிய வறுமைமிக்க குடும்பமொன்றில் 10 பிள்ளைகளுள் 7வது பிள்ளையாகப் பிறந்தார். தந்தையும் தாயும் வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். தந்தை குறேட் சமூகமாகவும், தாய் சிலாவின் சமூகத்தைச் சேர்ந்தவராகவும் இருந்தனர். இளம் பிராயத்தில் அதிக கல்வி வாய்ப்புகள் கிடைக்காததனால் 13 வயதிலேயே ஜோசப் புறோஸ் என்னும் பெயரையுடைய இவர், உலோகத் தொழிற்சாலை ஒன்றில் சேர்ந்துகொண்டார். ஒஸ்ரியா, பொகிமியா, ஜேர்மனி ஆகிய இடங்களில் தமது தொழில் காரணமாக பிரயாணம் செய்தார். இவ்வனுபவங்களுடன், அக்காலத்தில் தொழிலாளர் சங்கங்கள், சோஷலிஸக்கட்சிகள் ஐரோப்பாவில் பெற்றுவந்த செல்வாக்கினால் கவரப்பட்டவராக இருந்தார். இதனால் உலோகத் தொழில் சங்கத்தில் இணைந்து கொண்டதுடன் குறேட்டிகா சோஷலிஸக் குடியரசுக்கட்சியிலும் சேர்ந்து கொண்டார்.

படிப்படியாக கிராமியச் சூழலிலிருந்து பொதுவான வாழ்க்கைப் பாதையில் பிரவேசித்த இவர், முதலாவது உலகப் போரில் 25வது 'றெஜிமென்ட்' பிரிவில் இணைந்து கொண்டார். 1914 ஆகஸ்டில் சேபியாவுக்கு எதிராக போரிடும் அனுபவம் கிடைத்தது. அவர் ஒரு படைவீரனாகச் சென்றபோதும்கூட, போரினால் நாடுகளுக்கும், மக்களுக்கும் ஏற்பட்ட சேதங்கள் அவரை நிலைகுலையச்செய்தன! அந்த முதல் யுத்தத்தின் போதே அவர் யுத்தத்திற்கு எதிராகப் பலமான பிரச்சாரம் செய்தார். இதனால் அரசினால் கைதுசெய்யப்பட்டு பற்றோவாடின் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் 1915 ஜனவரியில் விடுதலைசெய்யப்பட்டு, காப்பேதியன் படைப்பிரிவில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அங்கு அவர் துணிச்சலாக பணிபுரிந்தமைக்காக கௌரவிக்கப்பட்டார். பின்னர் பாகோவினுமுனைக்கு அனுப்பப்பட்டார் அங்கும் அவர் மிகவும் துணிச்சலாக எதிர் அணிகளை விரட்டிய சந்தர்ப்பத்தில், கடும் காயங்களுக்குள்ளாகி சோவியத் ராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு, ரஷ்யாவிற்கு கொண்டுசெல்லப்பட்டார்.

அங்கு ரஷ்யப் பெண் ஒருவரை காதலித்து திருமணம் செய்துகொண்டார். 1920ம் ஆண்டு நாடு திரும்பினர். அன்று முதல் சாதாரண தொழிலாளியாகவாழ்வதிலும் எளிமையாக [illegible] பிரியம்கொண்டார். [illegible] றில் மெக்கானிக்காக சேர்ந்து கொண்டார். கம்யூனிஸ்ட் கட்சியிலும் இணைந்துகொண்டார். அக்காலகட்டத்தில் அரச பீடங்களில் இருந்தவர்கள் கம்யூனிஸ இயக்கங்களைத் தடைசெய்தும், நசுக்கியும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டி வந்தனர். இதனால் டிட்டோ 1923ல் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுதலைசெய்யப்பட்டார். இதனால் அவர் பொருளாதார ரீதியில் மிக, மிக வறுமையான சூழலில் தனது இரு பிள்ளைகளை இழந்தார்.

கப்பல் பழுதுபார்க்கும் நிலையம் ஒன்றில வேலைசெய்து கொண்டிருந்தபோது அவர் கட்சிப் பணிகளில் மிகவும் தீவிரமாகஈடுபட்டார். இதன் எதிரொலியாக 1925ல் கைதுசெய்யப்பட்டு ஏழு மாதம் நன்னடத்தையில் விடப்பட்டார். 1928ல் அவர் கம்யூனிஸ்ட்கட்சியின் மத்திய குழுவின் பிரதி 'பொலிட் பீரோ' உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டதுடன், குறேசன்-சிலாவிய கமிட்டியின் செயலாளர்நாயகமாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

டிட்டோவின் தன்னலமற்ற பணிகள் அவருக்கு கட்சியின் முக்கிய பதவிகளைப் பெற்றுக் கொடுத்தன. நாட்டுப்பற்றும், மக்கள் மீது கொண்ட பற்றும் அரசின் எதேச்சதிகாரத்திற்கு எதிராக அவரைத் தூண்டின. இதனால் 1928 ஆகஸ்ட் 4ம் திகதி கைதுசெய்யப்பட்டு, ஐந்து ஆண்டுகள் சிறைவைக்கப்பட்டார். இக்காலத்தில் டிட்டோ தனது பொதுவுடைமைச் சிந்தனைகளை வளர்ப்பதில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.

1934ல் சிறையிலிருந்து மீண்டதும் மக்கள் இயக்கத்தில் தீவிர பங்கெடுத்துக்கொண்டார். கட்சியின்மத்தியகமிட்டி உறுப்பினராகவும், 'பொலிட் பீரோ' உறுப்பினராகவும் பதவியுயர்த்தப்பட்டார்.

அரசின் அடக்கு முறைகள் அதிகரிக்க அவர் மக்கள்மீதும் நாட்டின் மீதும் கட்சி மீதும் பற்றுக்கொடவராக தன்னையும் இவற்றையும் ஒன்றாகக் கருதும் மனோ நிலைக்கு மாறிவிட்டார். கட்சிப்பணிக்காக ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணங்கள் செய்தார். மாஸ்கோ, பாரிஸ், வியன்னா பிரேக் ஆகிய நகரங்களுக்கு சென்று அங்குள்ள தலைவர்களுடன் தனது கருத்துக்களை விவாதித்துவந்தார். இதனால் அக்காலத்தில் ஐரோப்பாவில் டிட்டோ என்னும் நாமம் அரசாங்க மட்டங்களிலும் மக்கள் மத்தியிலும் சாதாரணமாக வழங்கும் நாமமாக உயர்ந்துவிட்டது.

1937-ல் தனது நாட்டுக்கு மட்டுமின்றி ஐரோப்பாவின் விடுதலைக்காக போராடிய (முடியாட்சிக்கு எதிராக) ஸ்பெயினில் தனது கவனத்தைச் செலுத்தினர். சிவில் யுத்தத்தில் ஈடுபடுவதற்காக 1300 யூகோஸ்லேவியத் தொண்டர்களை அனுப்பி ஜெனரல் பிராங்கோவின் கையைப் பலப்படுத்தினர் இத்தொண்டர் இயக்கமே யூகோஸ்லேவிய விடுதலைப் படைக்கு கருவாக அமைந்தது.

1941-ல் ஏப்ரல் 6-ந் திகதி ஜேர்மனி யூகோஸ்லேவியா வைத்தாக்கியது. இச் சூழலில் நாடு இன அடிப்படையில் பிளவுபட்டு துவேஷமும் அவநம்பிக்கையும் கொண்டிருந்தது பிரிவினைவாதிகள் ஜேர்மனியருடன் ஒத்துழைத்தனர் அரசினர் தம்மை மட்டும் [illegible] 22ம் திகதிக்குப் பின்னர் டிட்டோவே பிரதான எதிர்ப்புச் சக்தியாக விளங்கினர்

அவர் நாட்டினரை ஒருமுகப்படுத்த வேண்டிய அவசர பணியை மேற்கொள்ள வேண்டியிருந்தார் பதவிக்காக நாட்டைக் காட்டிக்கொடுத்து கூறுபோட முனைந்த பிரிவினைவாதிகட்கு எதிராக சகோதரத்துவம் ஒருமைப்பாடு ஆகியவற்றை வலியுறுத்தி நாட்டுப்பற்றை வளர்க்க முற்பட்டார் நாடு சுதந்திரம் பெற்றதும் மக்களுக்கு சமத்துவம் வழங்கப்படும் என்று உறுதியளித்தார்.

டிட்டோவின் கோஷம் அனைவரின் உள்ளங்களை பக்குவநிலைக்கு கொண்டு வந்தன. அவரது அணியில் பலர் சேர்ந்து கொண்டு பொது எதிரிகட்கு எதிராக போராட முன்வந்தனர் இதன் பலனாக நாட்டின் ஒருபாகம் டிட்டோ தலைமையில வெற்றிபெற்று சுதந்திரபகுதியாகியது அவர் மேற்கு சேபியாவில் தலைநகரை அமைத்து நிர்வாகத்தை மேற்கொண்டார். அவர் மாஸ்கோவின் விருப்பத்திற்கு மாறாக துணிந்து தனித்துவமாக செயற்பட்டுக் கொண்டிருந்தார். அவர் நாட்டின் ஏனைய பகுதிகளை மீட்பதற்காக சுதந்திரப்படையினரை அனுப்பிக் கொண்டிருந்தார், அவர் அரச குடும்பத்தினரையும் அவர்களது சகாக்களையும் எதிர்த்துப் போராடுவதோடு இத்தாலிய ஜேர்மனிய படையினர் பிரிவினைவாத இயக்கத்தினர் மாஸ்கோவின் எதிர்ப்புக்களையும் எதிர்த்துப்போராடி வெற்றிகண்டார். இதன் பலனாக 1943 செப்டம்பரில் யூகோஸ்லாவிய சமஷ்டிக் குடியரசைப் பிரகடனப் படுத்தினர்.

ஜெர்மனியின் தாக்குதல் 1944 மே 25-ல் மீண்டும் யூகோஸ்லாவியாவை எதிர் நோக்கச் செய்தது. இதில் டாங்கிப்படைகளின் தாக்குதல் நடைபெற்றபோது டிட்டோ மயிரிழையில் உயிர் தப்பினர். இந்த யுத்தத்தின் போது அவர் ஆற்றிய தீரமிக்க தலைமையும் போர் உத்திகளும அவருக்கு 'மார்ஷல்' என்ற பட்டத்தைப் பெற்றுக்கொடுத்தன

1945 மே 9ல் ஜேர்மனி யூகோஸ்லாவியாவின் சகல முனைகளிலும் தாக்குதலை மேற்கொண்டது மே-15ம் திகதிவரை நடைபெற்ற யுத்தத்தில் தனது சனத்தொகையில் 11 வீத மக்களை யூகோஸ்லாவியா இழந்தது. இந்த யுத்தத்தினால் யூகோஸ்லாவியாவின் நகரங்களும் வைத்தியசாலைகளும் தொழிற்சாலைகளும் சிதைந்தன. தெஹ்ரான் மகா நாட்டில் தனது நாட்டிற்காக வாதாடி நட்புநாடுகளிடமிருந்து ராணுவ புனரமைப்புத் தொண்டர்களையும் உதவிகளையும் டிட்டோ பெற்றுக்கொண்டார்

மார்ஷல் டிட்டோ ஒரு சமதர்மவாதியாக இருந்தபோதும்கூட மாஸ்கோவின் ஆலோசனைகளை ஏற்று தனது நாட்டை வழிநடத்த விரும்பவில்லை. தனது நாட்டுக்கு தேவைப்படும் சித்தாந்தங்களைப் பயன்படுத்திக் கொண்டார் சித்தாந்தங்களுக்காக நாட்டை அடகுவைக்க முடியாமையே அவரின் பொருளாதார அரசியல் ஞானத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கின' இதனால் சகல நாடுகளையும் அவர் நட்பு நாடுகளாகக்கருதிக் கொண்டார் மேற்கு நாடுகளுடன் நட்பை வைத்துக் கொண்டதனால் 1948 ஜூன் 28-ல் ஸ்டாலின் யூகோஸ்லாவியாவுடனான உறவுகளைத் துண்டித்துக்கொண்டார். யூகோஸ்லாவியா தன்னை நாடிவரும்

(5-ம் பக்கம் பார்க்க)

# வள்ளுவர் விழா
## யாழ். செயலக கலாச்சார மன்றம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக கலாச்சார மன்றம் நடாத்தும் திருவள்ளுவர் விழா அடுத்தமாதம் 24ம் திகதி மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

இவ் விழாவில் வண பிதா. தனிநாயகம் அடிகளார், யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், யாழ் பல்கலைக்கழக கலைபீடாதிபதி பேராசிரியர் க. கைலாசபதி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

விழாவின் இறுதியில் திரு. பொன். சுந்தரலிங்கத்தின் திருக்குறள் இசை நிகழ்ச்சியும் நடைபெறும். (வெ)

## திருவள்ளுவர் மகாசபை மகாநாடு

(அரியாலை)

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் 30-வது வருடாந்த மாநாடு கோப்பாய் சூரியோதய நெசவுநிலைய மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற விருக்கிறது.

அமரர் பங்கிராஸ் அரங்கில் திரு. எம். சிவதாசன் தலைமையில் நடைபெறும் இம்மாகாநாட்டில் திரு. மு. சா பூலோகம் மங்கள விளக்கேற்றி வைக்க, மகாசபைக் கொடியை கோப்பாய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜனாப் டபிள்யூ. ஜீ. முகைதீன் ஏற்றி வைப்பார்.

அமரர் நா. முருகேசன் அரங்கில் நடைபெறும் 'பாராட்டும் பட்டமளிப்பும்' வைபவத்தில் வலி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். அம்பலவாணர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பட்டமளித்துக் கௌரவிப்பார்.

வே. கந்தப்பிள்ளை அரங்கில் நடைபெறும் இயல் அரங்கில் பிரதம விருந்தினராக கோப்பாய் கிராமாட்சிமன்ற ஆணையாளர் திரு. யே. எஸ். எஸ் ஆனந்தம் கலந்து கொள்வார். சிறுவர் ஆண்டையொட்டி நடாத்தப்பட்ட பேச்சு, திருக்குறள் மனனப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கப்படும்

மாலை அமரர் யோகேஸ்போல் அரங்கில் நடைபெறும் கூட்டத்தில் பிரதம விருந்தினர்களாக யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ் அரசாங்க அதிபருமான திரு. யோ கேந்திரா துரைசுவாமியும், கோப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ் கதிரவேலுப்பிள்ளையும் கலந்து கொள்வார்கள். மற்றும் திரு. எஸ் ரி. என். கனகரத்தினம், திரு. கே. டானியல் உட்பட பலர் சொற்பொழிவாற்றுவார்கள் கவியரங்கும் நடைபெறவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயப் பணிகளுக்கு அரசாங்க நிதிஉதவி

(கொழும்பு)

இந்து சமயப் பணிகளுக்கு நிதியுதவி வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

இந்துசமயப் பணிகளுக்காக அரசாங்கத்திடமிருந்து நிதியுதவி பெறவிரும்பும் நிறுவனங்கள் தமது விண்ணப்பங்களைக் கொழும்பு, சிலிங்கோ மாளிகையிலுள்ள பிரதேசஅபிவிருத்தி அமைச்சின் இந்துசமயப் பணிப்பாளரிடமிருந்து பெறவேண்டிய படிவங்களில் 31-5-80க்கு முன்னர் அனுப்ப வேண்டுமென அறிவிக்கப்படுகிறது.

குருபூசை சமயப்பிரசங்கங்கள், கூட்டுவழிபாடு, சமய பாடவகுப்பு, பண்ணிசை வகுப்பு, வாசிகசாலை முதலியன நடத்தும் நிறுவனங்களுக்கும், இலவசமாகவோ குறைந்த விலையிலோ அச்சிட்டு விநியோகிக்கப்படும் இந்துசமயப் பிரசுரங்களை வெளியிடுவோருக்கும் நிதியுதவி வழங்கப்படுமெனவும், ஆலய நிர்வாகம், ஆலயப்புனருத்தாரணம் ஆகியவற்றுக்கான நிதியுதவிகளுக்கு இவ்விண்ணப்பப்படிவம் ஏற்புடையதல்ல எனவும் தெரிகிறது.

விண்ணப்பங்களை "கௌரவ செயலாளர், இந்துசமயவிவகார ஆலோசனைச் சபை, 10/2, தெமட்டகொட ப்ளேஸ், கொழும்பு-9" என்ற முகவரிக்கு அனுப்பவேண்டுமெனவும் சைவசமய தீட்சையை ஒழுங்கு செய்ய விரும்பும் நிறுவனங்களுக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுக்க இருப்பதாகவும், இது பற்றி தனியாகத் தொடர்புகொள்ளுமாறும் இந்துசமய விவகார ஆலோசனைச்சபை செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

# ஆலயச் சீர்கேடு குறித்து விசாரணை ஆரம்பம்

(புலோலி)

பொலிகண்டி கந்தவனாலய சீர்கேடுகள் குறித்து விசாரணை செய்வதற்காக யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திராதுரைசுவாமியால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த ஆலயத்தின் சீர்கேடுகள் குறித்து பொலிகண்டி சனசமூக நிலையம் பொலிகண்டி கிராம அபிவிருத்திச்சங்கம் ஆகியன ஒருங்கிணைந்து யாழ் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமியிடம் புகார் செய்திருந்தன. இதற்கிணங்க வடமராட்சி தெற்குமேற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு மு. தம்பிமுத்து தலைமையில் திரு. ச. தம்பிரத்தினம் திரு. சி. கணபதிப்பிள்ளை ஆகியோரைக் கொண்ட விசாரணைக்குழு ஒன்றை அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி நியமித்திருந்தார்.

இக்குழு கடந்த 16-ம் திகதி பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் தனது முதல் விசாரணையை ஆரம்பித்தது. இதனையடுத்து இம்மாதம் 27-ம் திகதி இக்குழு நேரில் சென்று ஆலயத்தைப் பார்வையிடுவதுடன் தொடர்ந்தும் மேல்விசாரணையை மேற்கொள்ளுமென்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

# நடிகமணி நாடகம்

(கொழும்பு)

இரண்டாயிரம் தடவைகளுக்குமேல் மேடையேறிய நடிகமணி வைரமுத்துவின் "சத்தியவான் சாவித்திரி" மதுர இசை நாடகம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நாளை மறுதினம் மாலை நடைபெறும்.

# ஒய்வு பெற்றார்

(அரியாலை)

யாழ். பரி யோவான் கல்லூரியில் 24 வருடங்களுக்கு மேலாகவிலங்கியல் ஆசிரியராகப் பணியாற்றிய திரு. யே. என். பொன்னையா சேவையிலிருந்து இளைப்பாறுகிறார்.

கல்லூரியின் விளையாட்டுப் பகுதிச் செயலாளராகவும் பல ஆண்டுகள் பணிபுரிந்த இவர் கூடைப்பந்தாட்டப் பயிற்சியாளராகவும் கல்லூரியின் ஆசிரியர் சேமலாபச் சங்கத்தின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

கல்லூரியின் சாரணர் இயக்கம், கடற் சாரண இயக்கம் ஆகியவற்றின் பொறுப்பாளராக விளங்கிய இவர் வடமாகாண சாரணர் இயக்கத்தின் நிர்வாகப் பிரிவின் உதவி மாவட்ட ஆணையாளராகவும், சாரண இயக்கத்தின் சின்னப் பிரிவுக் காரியதரிசியாகவும், உதவிமாவட்ட ஆணையாளர் பயிற்சிப் பிரிவின் பொறுப்பாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

இவர் தமது கல்விச் சேவையை நைஜீரியாவில் ஆற்றுவதற்குத் தீர்மானித்துள்ளார்

# கதறி அழுத ரஞ்சன்

(மட்டக்களப்பு)

மறைந்த தலைவர் கனகரத்தினத்தின் மைந்தன் ரஞ்சன் கதறி அழுதகாட்சி மக்களை மேலும் சோகத்தில் ஆழ்த்தியது.

காலஞ்சென்ற அமரர் கனகரத்தினத்தின் மூன்றாவது புதல்வரான ரஞ்சன் தனது தந்தைக்கு அஞ்சலியை புதன்கிழமை காலை மட்டக்களப்பு நகர மண்டபத்தில் செலுத்திக் கொண்டார்.

சிறைக்காவலாளர்களின் பாதுகாப்பில் கொண்டுவரப்பட்ட ரஞ்சன் "அப்பா... அப்பா..." என்று கதறி கதறி அழுத காட்சி மக்கள் உள்ளத்தை தவிக்க வைத்தது. இறுதிக்கிரிகைகளில் கனகரின் மூத்த புதல்வர்கள் இருவர் கலந்து கொண்டனர். ரஞ்சன் பங்கு பற்ற அனுமதிக்கப்படவில்லை.

ரஞ்சன் செங்கலடி கிராம வங்கி கொள்ளை வழக்கு சந்தேக நபர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பூநகரி விளையாட்டுப் போட்டி

(வேலணை)

விளையாட்டு அமைச்சின் ஆதரவில் நடைபெறும் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான விளையாட்டுப்போட்டி அண்மையில் பூநகரி மகாவித்தியாலயவிளையாட்டு மைதானத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு.ரி வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்றது. பொலிஸ் அதிகாரி திரு.எல். டபிள்யூ. ஜெயவர்த்தன குத்துவிளக்கேற்றி போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.

உதவி அரசாங்க அதிபர் திரு.வைத்திலிங்கம் பேசும் போது விளையாட்டுப்போட்டிகளில் மக்கள் பங்குகொள்ளும் போது ஒருமைப்பாடு உருவாவதுடன் திறமைகளை காட்டிக்கொள்ளவும்முடிகிறது என்றார். விளையாட்டுப் பொறுப்பதிகாரி திரு.வி. அரிச்சந்திரா நன்றி கூறினார். கழகங்கிடையிலான போட்டியில் சித்தங்குறிச்சி யுனைட்டட் கிளப் [illegible] புள்ளிகளை பெற்று வெற்றிக் (ச) கேடயத்தை கபற்றுக்கொண்டது. இக் கேடயத்தை பூநகரி பலநோக்கு கூட்டுறவு [illegible] பிணர்கள் அன்பளிப்பு செய்திருந்தார்கள்.

# இப் மாதம் பரீட்சை முடிவுகள்

(பண்டத்தரிப்பு)

ஆயுர்வேத திணைக்களத்தினால் கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் நடாத்தப்பட்ட யாழ் லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி இறுதி ஆண்டு பரீட்சை முடிவுகள் இம்மாதம் வெளியாகுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

பரீட்சைப் பகுதிவாளர் திரு. எச். பி. ஹேரத் இப் பரீட்சையின் அங்கீகரிக்கப்பட்ட முடிவுகளை இம்மாத இறுதி வாரத்தில் யாழ் லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி நிர்வாக அதிபருக்கு அனுப்பி வைப்பார் என்று வடஇலங்கை சுதேச வைத்திய சபைச் செயலாளரும், கல்லூரி உப அதிபருமான டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி தெரிவித்தார்.

# பயிற்சி நெறிகள்

(உடுப்பிட்டி)

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியின் முழுநேரத் தொழில் நுட்பப் பிரிவில் புதிய வகுப்புக்கள் ஜூன் மாதம் 6ம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய வகுப்புகளில் மோட்டார் இயந்திரவியலும், பழுது பார்த்தலும், கட்டிடங்களில் மின் இணைப்புச் செய்தல், உடை தயாரித்தல், உணவு தயாரித்தலும், பாதுகாத்தலும் ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவ்வகுப்புகளில் சேர விரும்புவோர் மே மாதம் 20ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகிறது.

இப்பயிற்சி நெறிகளை முடித்துக்கொண்டு வெளியேறும் மாணவர்களுக்கு கல்வித்திணைக்களத்தால் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

# இருவர் குருத்துவ அபிஷேகம்

(சாவகச்சேரி)

நாவாந்துறை புனித மரியன்னை ஆலயப் பங்கைச் சேர்ந்த அருட்செல்வன் மரியதாஸ் ஸ்டீபன் அடுத்த மாதம் 1-ந் திகதி மாலை 4-30 மணியளவில் யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்தில் யாழ். மறை மாவட்ட மேற்றிராணியார் அதி வந். கலாநிதி பி. தியோகுப்பிள்ளை ஆண்டகையால் குருப்பட்டாபிஷேகம் செய்யப்படவிருக்கின்றார்.

இவர் பெங்களூர் தர்மராம் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் படிப்பையும் கார்மல்ராம் குருத்துவக்கல்லூரியில் இறையியல் படிப்பையும் கற்றார். இவர் அடுத்த மாதம் 2-ந் திகதி மாலை 5 மணிக்கு நாவாந்துறை புனித மரியன்னை ஆலயத்தில் தனது முதற் திருப்பலிப் பூசையை ஒப்புக்கொடுப்பார்.

யாழ்ப்பாணம் புனித யுவானியார் பங்கைச் சேர்ந்த அருட்செல்வன் நீ. சு. சாந்திகுமார் எமிலியானுசும் அடுத்த மாதம் 1-ந் திகதி மாலை 4-30 மணியளவில் யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்தில் யாழ். மாவட்ட மேற்றிராணியார் அதி. வந். கலாநிதி பி. தியோகுப்பிள்ளை ஆண்டகையால் குருப்பட்டாபிஷேகம் செய்யப்படவிருக்கின்றார். இவரும் பெங்களூர் தர்மராம் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் படிப்பையும், கார்மல்ராம் குருத்துவக் கல்லூரியில் இறையியல் படிப்பையும் கற்றார். இவர் அடுத்த மாதம் 4ம் திகதி மாலை 5மணிக்கு யாழ். புனிதயுவானியார் தேவாலயத்தில் தனது முதற் திருப்பலிப் பூசையை ஒப்புக் கொடுப்பார்

(அ)

# 1984ல் ஜனாதிபதி . . .

(8ம் பக்கத் தொடர்ச்சி)

தோம். இக்கால எல்லையில் இந்தத் தனிநாடு இலட்சியத்தில் ஆக்கபூர்வமாக என்ன நடந்திருக்கிறது? சிங்கள மக்களின் நட்பையும், நல்லெண்ணத்தையும் இழந்ததுதான், தீர்க்கதரிசனமற்ற இம்முடிவால் ஏற்பட்ட பலன். தனிநாடு கோரியவர்கள், அமைச்சர்களுடன் பேசி, தங்களுக்கு ஜீப்புகளும், உறவினர்களுக்கு வேலையும் பெற்றுக் கொள்கிறார்கள். மக்கள் ஏதாவது உதவிகோரினால் 'நாம் தனிநாடு இலட்சியத்துக்காக போராடுபவர்கள்; இவற்றைக்கேட்கபாட்டோம்' என்கிறார்கள் தட்டாக்கி தூக்குப் திட்டம் இருந்தால் கூட்டணி அதனையும் செயலில் காட்டட்டும். இன்று முதலாளித்துவ ஐ. தே. க.வுக்கு வாக்களித்து வாங்கிக்கொண்டிருக்கின்றது. கூட்டணி அடுத்த ஜனாதிபதி தேர்தலில் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ ஐ. தே. க.வுக்கு ஆதரவளிக்கும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்கும் நிலை ஏற்படலாமென்று பலர் எதிர்பார்க்கிறார்கள். சுதந்திரக்கட்சியின் தலைமையிலும் இப்படி ஓர் எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. தமிழர் எப்போதுமே ஐ.தே.க.வுடன்தான் நிற்கிறார்கள் என்ற எண்ணமும் அதற்கு ஏற்பட்டிருக்கிறது.

அண்மையில் ஓரிடத்தில் எனைச் சந்தித்த ஒரு யாழ்ப்பாணத்து தமிழர் "நீங்கள் தானே மிளகாயை 40 ரூபாவுக்கு விற்றீர்கள்" என்றார் கோபத்தோடு. தமிழரான அவரே அப்படிக் கேட்கும் போது கட்சிக்குள் எத்தனை நெருக்கடி எனக்கு இருந்திருக்கும்! ஆனால் அவற்றுக்கெல்லாம் இடமளியாது நான் செயல்பட்டேன்.

## 'சுதந்திரக் கட்சியின் போக்கு சோஷலிஸப் பாதையில் 'இல்லை'

எனினும் சுதந்திரக் கட்சியின் இன்றைய போக்கு சோஷலிஸப் பாதையில் இல்லை. திருமதி பண்டாரநாயக்காவின் தனித்த எண்ணத்தில் அது செல்லுமானால் இந்நிலை ஏற்பட்டிருக்காது. இனவாத ரீதியாக பாறக்கூடிய நிலை அதன் போக்கில் ஏற்பட்டுள்ளது.

## தமிழரின் இறைமைக்கு...

இந்நிலையில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் நாம் விழிப்போடு செயல்படவேண்டும். தாம் ஆரம்பிக்கும் இயக்கம் எந்தவோர் அரசியல் கட்சிக்கும் நிபந்தனையோடு ஆதரவு அளிக்காது. ஆனால் ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்போரின் கொள்கை விளக்கங்களில் தமிழரின் இறைமைக்கு இடமளிப்பவருக்கு நாம் ஆதரவு அளிப்போம்.

இந்நாட்டை சோஷலிசப் பாதையிலிருந்து திருப்பிய முழுப் பொறுப்பும் தமிழ் மக்களைச் சார்ந்ததே. முதலாளித்துவத்தைத்தான் அவர்கள் எப்போதும் விரும்புகிறார்கள் என்றும் திரு. குமாரசூரியர் கூறினார்.

இனப்பிரச்சனைக்கு முன்னதாக பொருளாதாரப் பிரச்சனை அணுகப்படவேண்டுமென்பது அவரது கருத்தாகும். கூட்டணியிடம் எவ்விதபொருளாதார திட்டமும் இல்லையென்றும் அவர் கூறினார்

(ப-கு)

# சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி-80

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை பஸ் நடத்துநரிடமும் ஒழுக்கம், அவதானம் திறமை ஆகிய நற்பண்புகளை பஸ் சாரதிகளிடமும் வளர்க்கும் வண்ணம் யாழ் ரோட்டறிக் கழகம்

"சிறந்த நடாத்துநர் . சிறந்த சாரதி"

போட்டியை

இலங்கை வடபிராந்திய போக்குவரத்துச்சபையுடனும் 'ஈழநாடு' பத்திரிகையுடனும் இணைந்து நடாத்த எண்ணியுள்ளது. இம்முறை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்திவு, மன்னார், வவுனியா ஆகிய ஏழு டிப்போக்களையும் உள்ளடக்கிப் போட்டி நடாத்தப்படுகிறது.

இந்த டிப்போக்களிலிருந்து செயற்படும் பஸ் வண்டிகளில் கடமையாற்றும் சிறந்த சாரதிகளையும் நடாத்துநரையும் தெரிவு செய்ய உதவும் வண்ணம் "ஈழநாடு" பத்திரிகையில் இம்மாதம் 25 ம் திகதி முதல் பிரசுரிக்கப்படும் கூப்பன்களை நிரப்பி அனுப்பும்படி யாழ் ரோட்டறிச்சமூகம் பஸ் பிரயாணிகளை அன்புடன் கோருகிறது.

கீழே தரப்படும் கூப்பனைக் கத்தரித்து நிரப்பி அனுப்பவேண்டிய முகவரி:

ரோட்டேறியன் பல்வைத்தியகலாநிதி
பா. சோ. பாரதி
தலைவர் - தொழிற்சேவை பகுதி
யாழ் ரோட்டறிக் கழகம்.

## சிறந்த பஸ் நடத்துநர்-சாரதி தெரிவுப் போட்டிக் கூப்பன்

சிறந்த நடத்துநர் பெயர் சிறந்த சாரதி பெயர்

................................ ................................

டிப்போ :- யாழ்ப்பாணம்-காரைநகர்-பருத்தித்துறை-கிளிநொச்சி-முல்லைத்திவு-மன்னார்-வவுனியா.

(நீங்கள் தெரிவுசெய்யப்பட்டவர் கடமையாற்றும் டிப்போவின் கீழ் கீறிடுக)

பஸ் செல்லும் வழி இலக்கம் (Route No..............)

அனுப்புபவர் பெயர்.......................ஒப்பம்...........

விலாசம்.................................................

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'மட்டக்களப்பின் முன்னேற்றத்துக்கு தன்னை அர்ப்பணித்த பெருந்தலைவர்!'

## 'கனகர்' அஞ்சலிக் கூட்டத்தில் தலைவர்கள் புகழ்மாலை

நமது மட்டக்களப்பு நிருபர் தமிழினியவன்

(மட்டக்களப்பு)

"கனகரத்தினத்தின் மறைவு இந்த நாட்டுக்குப் பேரிழப்பாகும்" என்று கடந்த புதன் கிழமை மாலை மட்டக்களப்பு நகர மண்டபத்தில் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா இரங்கலுரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மட்டுநகர்முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை இவ்வைபவத்துக்கு தலைமை வகித்தார். பிரதமர் தொடர்ந்து கூறியதாவது:

"கனகரத்தினத்தை எமது ஜனாதிபதி பேரவைக்கு வருமுன்னரே நன்கு அறிந்திருந்தார். அவரின் குடும்ப நண்பராக இருந்தார். இவரது மறைவு; இவரை அறிந்த தமிழ் சிங்கள, முஸ்லிம், பறங்கியர் உட்பட நாட்டின் தேசிய இனத்தவர் அத்தனைபேருக்கும் பேரிழப்பாகும்.

### மக்களுக்கே அர்ப்பணித்தார்

"கனகரத்தினம் மக்கள் சேவைக்காக தன்னை அர்ப்பணித்தவர். அவர் சூடுபட்ட பின் ஆறுமுன்பே மக்கள் நலனுக்காக பெரும் கஷ்டப்பட்டவர். இத்தகைய பெருந்தலைவரை இழந்து இன்று தவிக்கின்றோம்.

"புயலால் சேதமடைந்த மட்டக்களப்பை முன்னேற்ற வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர் அவர். தனக்கென வாழாமல், மக்களுக்காக வாழ்ந்த உத்தமர். தனக்காக எந்த உதவியும் அவர் கேட்பதில்லை எப்போதும் பொது மக்கள் பிரச்னைகளைப் பற்றித் தான் பேசுவார்.

"இவர், பொதுநல சேவையில், பாராளுமன்ற உறுப்பினராக வந்து ஈடுபடவில்லை அதற்கு முன்னரே ஈடுபட்டிருந்தார் இதனால்தான் ஜனாதிபதி இவரிடம் மாவட்ட அமைச்சர் பதவியை ஒப்படைத்தார்.

### ஒரு தெய்வப் பிறவி

எமது அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது கனகரத்தினம் சுடுபட்ட செய்தி அறிந்தோம். உடனே சபையை முடித்துவிட்டு வைத்தியசாலைக்கு சென்றோம். அப்போது அவர் மீது இரத்தம் நிறைந்து காணப்பட்டது. அவர் அருகில் ஜனாதிபதி சென்று அவரின் கையைப் பிடித்து; 'உங்கள் உயிரைக் காப்பாற்ற என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டார். உடனே அவர் என்னைக்காப்பாற்றுங்கள் என்று சொல்லவில்லை "உகந்தை முருகன் காப்பாற்றுங்கள்; உகந்தை முருகனை காப்பாற்ற மட்டும் நீங்கள் உதவி செய்யவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். இவர்ஓர் தெய்வப்பிறவியாகும் இன்று அந்தப்பிறவி தெய்வத்திடமே சென்றுவிட்டது அவரின் இழப்பு எமது பேரிழப்பு. அவரைப்பற்றி சொல்வதாயின் முடிவின்றி சொல்லிக்கொண்டே போக முடியும்" என்று பிரதமர் கூறினர்.

### ஏழைகளின் நண்பன்

சபாநாயகர் ஜனாப் பாக்கீர் மாக்கார் உரையாற்றுகையில் கூறியதாவது;

"கனகரத்தினம் எம்மை விட்டு பிரிந்துசென்றுவிட்டார் அவரை இழந்து நாம் இன்று தவிக்கின்றோம், அவர் ஆற்றிய சேவைகள் எம்மைவிட்டு என்றும் நீங்காமல் இருக்கவேண்டும். அவர் மறைந்துவிட்டார். ஆனால் அவர் ஆற்றிய சேவையை நாம் ஒருபோதும் மறக்கமுடியாது ஏழைகளின் நண்பராக இருந்து ஏழைகள் வாழ்விற்கே தன்னை அர்ப்பணித்த உத்தமர்" என்று கூறினர்.

### நினைப்பதை சாதித்தார்

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

"கனகரத்தினத்தின் குறுகிய கால அரசியல் வாழ்வில் அவர் ஆற்றிய சேவை சொல்ல முடியாதவை. அவர் மட்டக்களப்பு மக்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தவர். எக்காரியத்தைச் செய்யவேண்டுமென்று நினைத்தாலும் அதனை நிறைவேற்றியே தீருபவர். மட்டக்களப்புப் பகுதியை முன்னேற்ற வேண்டுமென்பதற்காக அவரை மாவட்ட அமைச்சராக நியமனம் செய்யுமாறு ஜனாதிபதியிடம் கேட்டோம். புயலில் சேதமடைந்த மட்டக்களப்பை முன்னேற்ற வேண்டுமென்பதற்காக அயராது எங்களுடன் உழைத்த உத்தமரை இன்று நாம் இழந்து தவிக்கின்றோம்" என்றார்.

### மட்டுநகர்பற்றித் தான் பேசுவார்

கொழும்பு மாவட்ட அமைச்சர் திரு. மல்லவராய்ச்சி உரையாற்றுகையில் கூறியதாவது! 'மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் திரு. எம் கனகரத்தினம் பாராளுமன்றத்தில் எல்லோரதும் அன்பைப் பெற்றவர். பழகுவதற்கு இனியவர். இவர் புயலில் சேதமடைந்த மக்களுக்கு ஆற்றிய சேவையை நாம்அறிவோம். அயராது உழைத்தவர் அவர். எமது மாவட்ட அமைச்சர் சபைக் கூட்டத்தில் மட்டக்களப்பு அபிவிருத்தி பற்றித் தான் பேசுவார். இவரின் இழப்பு அவரது உறவினர்களுக்கு மட்டுமல்ல, எமக்கு மட்டுமட்டுமல்ல இந்நாட்டிற்கே பேரிழப்பாகும்' என்றார்.

### வீதிகளில் நிறைந்த மக்கள்

மற்றும் காணி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா, கலாச்சார அமைச்சர் திரு. ஈ.எல். ஹேரத்முனி ஹேருள்ளே, இலங்கை தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த திரு. சி அண்ணாமலை ஆகியோரும் உரையாற்றினர். அதனைத் தொடர்ந்து மாலை ஐந்து மணிக்கு மக்கள் கதறி அழ, பூதவுடல் பிரதான வீதிகளின் ஊடாக கல்லடி கடற்கரைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

வீதியின் இருமருங்களிலும் மக்கள் பல்லாயிரக்கணக்கில் குழுமி நின்று, கண்ணீர் மல்க தங்கள் அஞ்சலியைச் செலுத்தினர். பூதவுடலைத் தாங்கிய பெட்டி நகரமண்டபத்திலிருந்து அமைச்சர்கள், உறவினர்களால் தூக்கிவரப்பட்டு வாகனத்தில் வைப்பட்டது அப்போது மக்கள் "ஐயா எங்களை அனாதையாய் தவிக்க வைத்து விட்டு விட்டீர்களே" எனப்பதறி அழுதனர்.

### இறுதி ஊர்வலம்

பல்லாயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். வீதிகள் வெள்ளை நிற அலங்காரம் கொண்டிருந்தது. இறுதி ஊர்வலம் இரவு 7-30 மணியளவில்கல்லடி கடற்கரை மைதானத்தை அடைந்தது. அதனைத் தொடர்ந்து மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை தலைமையில் மீண்டும் ஓர் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. கண்ணீர்மல்க தளதளத்த குரலில் அமைச்சர் இராசதுரை தமது தலைமையுரையில் கூறியதாவது:

### "அண்ணனை இழந்துவிட்டேன்"

"இன்று நாம் பெருந் தலைவரை இழந்து விட்டோம். அண்ணனை இழந்த தம்பியாக தவித்துக் கொண்டிருக்கின்றேன். என் அண்ணனை இழந்து விட்டேன். அம்பாறை மாவட்டத்தின் எல்லைக் காவலனாக இருந்த உத்தமன். புயலால் சேதமடைந்த எமது பகுதியை முன்னேற்ற வேண்டுமென்பதற்காக எமக்கு பக்க பலமாக இருந்த உத்தமர். மட்டக்களப்பு பண்ணின் முன்னேற்றத்திற்கு இரவும் பகலும் பாராது உழைத்த உத்தமன். ஏழைமக்கள் வாழ்வு உளர வேண்டும் என்று கனவு கண்டு செயல்பட்ட உத்தமரை இழந்து விட்டோம். எல்லோருக்கும் இனியவர், எமது இதயத்தை சுக்கு நூறாக்கி சிதறடித்துவிட்டு, எம்மை விட்டுச் சென்றுவிட்டார். ஆனால் அவர் எமக்கு ஆற்றிய சேவைகளை மறக்கமாட்டோம். அவர் உடல் மறைந்தாலும் எமது உள்ளத்தில் என்றும் இருப்பார்.' என்று கூறினர்.

மற்றும் மன்னார் மாவட்ட அமைச்சர் ஜனாப் மஃரூப், முல்லைதீவு மாவட்ட அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். எம். மன்சூர், மட்டக்களப்பு இரண்டாவது பா உ ஜனாப் டரீட் மீராலெப்பை, பொத்துவில் முதல்வர் ஜனாப் ஜலால்தீன் உட்பட பலர் உரையாற்றினர்.

கனகரின் மூத்தமகன் (கனடாவிலிருந்து வந்தவர் சிதைக்குத் தீமூட்டினர். மக்கள் கதறி அழத் தொடங்கினர்.

## தனித்துவமிக்க ஒரு தலைவர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஸ்டாலின் எதிர்பார்த்தார். எல்லைப்பிரச்னைகள் பொருளாதார நெருக்கடிகள் ராணுவத் தலையீடுகள் யூகோஸ்லாவியாவை அல்லது டிட்டோவை நிலைகுலையச் செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது டிட்டோவின் தலைமையின் கீழ் இவையாவும் சிக்கலற்றனவாகப் போய்விட்டன. இதனால் சோவியத் தலைவர்கள் தமது கருத்தோட்டத்தை மாற்றிக் கொள்ளவேண்டியேற்பட்டது. 1953-ல் ஸ்டாலின் மரணமான பின்னர் குருஷ்சேவ் 1955 ஜூனில் யூகோஸ்லேவியாவுக்கு விஜய சய்து இருநாடுகளுக்குமிடையே நட்பை ஏற்படுத்திக் கொண்டார்

1953 ஜனவரி 13ல் முதலாவது யூகோஸ்லேவிய தலைவராக மக்களால் மார்ஷல் டிட்டோ தெரிவு செய்யப்பட்டார். பல இன மக்கள்வாழும் நாட்டில் நாட்டின் ஒருமைப்பாட்டின் சின்னமாகவே அவர் விளங்கினர் யூகோஸ்லாவிய நாட்டின் சிற்பியாக மட்டுமன்றி உலக சமாதான புருஷராகவும் விளங்கினர். அணிசேரா இயக்கத்தைக் கட்டியெழுப்பிய சிற்பிகளான அமரர் நேரு, எகிப்திய தலைவர் அமரர் நாஸர் ஆகியோரோடு ஒன்றிணைந்து செயற்பட்டவர் டிட்டோ. ஆரம்பத்தில் 25 நாடுகளை ஒருமுகப்படுத்தி இயக்கத்திற்கென தனித்துவமான போக்கினைக் கட்டிக் காத்து இன்வரை உழைத்து வந்தவர். பல சந்தர்ப்பங்களில் இவ்வியக்கத்தில் பூசல்கள் தோன்றிய போதெல்லாம் வல்லரசுகளின் பிடிக்குள் சிக்கவிடாது பாதுகாத்து வந்துள்ளார். கியூபாவில் ஹவானா மகாநாட்டில் மார்ஷல்டிட்டோ ஆற்றிய பணி என்றும் நினைவு கூரத்தக்கதே.

யூகோஸ்லேவியாவின் தனித்துவம் எவ்வாறு பேணப்பட வேண்டும் என்பதில் டிட்டோ எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருந்தாரோ அதே போல சகல நாடுகளின் தனித்துவமும் சுயாதீபத்தியமும் பேணப்படவேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருந்தார். 1968 ஆகஸ்டில் செக்கோஸ்லேவாக்கியாவில் சோவியத் யூனியன் தலையிட்டு டூப்செக்கின் ஆட்சியைக் கவிழ்த்தபோது மிகவும் பலமாக சோவியத் யூனியனைக் கண்டித்ததுடன் தனது நாட்டின் பாதுகாப்பிற்காக புதிய திட்டங்களைக்கூட வகுத்தாரே தவிர மேற்கு நாடுகளின் தயவை நாடவில்லை. அண்மையில் ஈரான், ஆப்கானிஸ்தான் நெருக்கடியில் வல்லரசுகளின் பிடிப்பினை பலமாகக் கண்டித்ததுடன் மரணப்படுக்கையில் இருந்து கொண்டு உலக சமாதானத்திற்காக வேண்டுகோள் விடுத்தமையை நினைவு கூருதல் அவரது பணிக்கு ஒரு சிறு உதாரணமாகும்.

அன்பினாலும், சமாதானத்தினாலும் உலக நாடுகளைக் கட்டிக்காத்த தலைவர்கள் வரிசையில் நீண்டகாலம் பணிபுரிந்த மார்ஷல், முதன்மையாகக் கருதப்பட வேண்டியவராவர் 1968- 1970 ம் ஆண்டு காலத்தில் சொந்த நாட்டில் பிரயாணம் செய்வதுபோலவே ஆசிய. ஆபிரிக்க லத்தின் அமெரிக்க நாடுகளுக்கு பலதடவைகள் விஜயம் செய்த ஒரே தலைவர் மார்ஷல் டிட்டோவாகவே இருக்க முடியும். அவர் தனித்துவம் மிக்கவர்.

உத்தியோக பூர்வ பிறந்த தினமாக மே 25ந் திகதியாக கொண்டாடப்படுவதனால் 88வது வயது அண்மிக்கும் இவ்வேளையில் அவர் மரணப் படுக்கையில் பலநோய்களினால் பீடிக்கப்பட்டு அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கின்றார். அவர் நாட்டுமக்கள்மீதும், உலகின் மீது கொண்டுள்ளபாசமே இறுதிவரை உடலும் உயிரும் போராட வேண்டிய நிலைக்கு தள்ளி உலக மக்களை கலங்க வைத்துள்ளது. அவர் அமைதியான நீண்ட தூக்கத்திற்கு செல்வதற்கு தடைகளாக உலக அமைதியின்மையே காரணமாகும். மார்ஷல் டிட்டோ அவர்களது வழி காட்டல்கள் என்றும் யூகோஸ்லேவியாவினையும் [illegible] கினையும் பாதுகாக்கும் என நம்புவோம்.

## "நாட்டை எதிர்நோக்கும் இருள் சூழ்ந்த காலம்!"

### கம்யூனிஸ்ட் கட்சி (இடது) எச்சரிக்கை

[யாழ்ப்பாணம்]

"தொழிலாள வர்க்கத்தினதும், மக்களினதும் எதிர்ப்பையும், கண்டனத்தையும் அரசாங்கத்திற்கும், அதன் தலைவர்களுக்கும் எடுத்துக்காட்டும் வகையில் எமது கட்சியின் தலைமையில் நடைபெறும் புரட்சிகர மேதின ஊர்வலத்திலும்,மேதினக்கூட்டத்திலும் பெரும்திரளாக தொழிலாளர்கள், விவசாயிகள், புத்திஜீவிகள், வாலிபர்கள், மாணவர்கள்ஆகியோர் கலந்துகொள்ள வேண்டும்" என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளது.

மேற்படி கட்சியின்மேதினக் கூட்டம் அன்று மாலை யாழ் றிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது கட்சியின் ஊர்வலம் திருநெல்வேலிச் சந்தை மைதானத்திலிருந்து அன்று பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி யாழ். றிம்மர் மண்டபத்தை வந்தடையும்.

இவ் ஊர்வலத்திலும், கூட்டத்திலும் இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியின் கீழ் இயங்கும் நவலங்கா தொழிற் சங்கம், இலங்கை தேசபக்த வாலிபர் இயக்க வட பிரதேசக்கமிட்டிகள் ஆகியன கலந்து கொள்ளவுள்ளன கம்யூனிஸ்ட் கட்சி விடுத்துள்ள செய்தியில்மேலும் தெரிவித்துள்ளதாவது:

"தேசிய ரீதியில் நமது நாடு ஒரு இருள் சூழ்ந்த எதிர்காலத்தை நோக்கிஇழுத்துச்செல்லப்படுகின்றது. அதேவேளை சர்வதேச நிலையானது யுத்தக் கெடுபிடிகளும், ஆக்கிரமிப்புப் பயமுறுத்தல்களும் நிறைந்த நிலையில் காணப்படுகின்றன. இதற்கு சோவியத்-அமெரிக்க மேலாதிக்கவல்லரசுகளின் போட்டியே மையமாகி உள்ளது. இத்தகைய தேசிய-சர்வதேசிய சூழ்நிலையிலேயே உலகத்தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தினமான மே தினம் வருகின்றது. இதில் சகலரும் கலந்துகொள்ள வேண்டும்". [ ]

## "தமிழ் நாடக அரங்கம்"

### நூல் வெளியீட்டு விழா

(கொழும்பு)

திரு. இ. சிவானந்தன் எழுதிய "இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்நாடக அரங்கம்" நூல் வெளியீட்டுவிழா நாளை மாலை சைவமங்கையர் கழகத்தில் நடைபெறும். திருவாளர்கள் ந. சண்முகரத்தினம், பெனடிக்ற்பாலன், சி. தில்லைநாதன் ஆகியோர் நூல் அறிமுகம் செய்வர்.

## கேதீச்சரத்தில் சைவவளர்ச்சி மன்றம்!

[யாழ்ப்பாணம்]

"சைவ ஆசாரங்களை சைவ மக்கள் வாழ்கின்ற கிராமங்கள் தோறும் வசன்று பிரசாரம் செய்வதன்மூலம் சைவசமயத்தை வளர்ப்பதுடன்சமயத்தின் நோக்கத்தையும், கொள்கைகளையும் மக்கள் அறியச் செய்யலாம்".

திருக்கேதீஸ்வரம் சைவ வளர்ச்சி மன்ற அங்குரார்ப்பணக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப்பேசியதிரு.மு.ஞானப்பிரகாசம் மேற்கண்டவாறு கூறினர்.

மேற்படி கூட்டம் திருக்கேதீஸ்வரத்தில் நடைபெற்றது. [கோ]

## வெற்றிபெற்ற...

[7ம் பக்கத் தொடர்ச்சி]

இ. திருநாவுக்கரசு ஆகிய இருவரும் முறையே முதலாவது இரண்டாவது இடங்களைப் பெற்று வெற்றியீட்டி [illegible] இ. சாந்திகுமார் மூன்றாம் இடத்தைப் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணயக் கைதிகள் விடுதலை இன்றேல்

# ஈரான் மீது அமெரிக்காவும் மே. ஐரோப்பிய நாடுகளும் மேலும் பொருளாதாரத் தடைகளை விதிக்கும்

## வெள்ளை மாளிகை எச்சரிக்கை

வாஷிங்டன், ஏப். 24

ஈரானிய மாணவர்கள் அமெரிக்க பணயக் கைதிகளை உடன் விடுவிக்கத் தவறின், அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பிய நேசநாடுகளும் ஈரான்மீது மேலும் பொருளாதாரத் தடைகளை விதிக்கும் என்று வெள்ளை மாளிகை எச்சரிக்கை விடுத்துள்ளது.

பணயக்கைதிகளை மாணவர்கள் ஈரான் அரசிடமோ அன்றி செஞ்சிலுவைச் சங்கத்திடமோ ஒப்படைத்தால்கூட அமெரிக்கா திருப்தியடையாது, உடனடியாக பணயக்கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டுமென்றும் வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## ஈரானிய ராஜதந்திரி வெளியேற்றம்

மொன்ட்றியோல், ஏப். 24

கனடாவும் ஈரானுக்கு எதிராக வரையறுக்கப்பட்டவர்த்தகத் தடைகளை அறிவித்துள்ளது.

அத்துடன் ஈரானிய ராஜதந்திரி ஒருவரும் கனடாவிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். [இ]

## மே. ஐரோப்பிய நாடுகளின் ஆதரவை நாடுகிறது ஈரான்

தெஹ்ரான், ஏப். 24

ஈரான்-அமெரிக்க நெருக்கடி அதிகரித்து வருவதன் எதிரொலியாக மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் ஈரானுக்குமிடையிலான உறவுகள் மோசமடைந்து வருவதையடுத்து ஈரான் சோவியத் யூனியனுடனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் நல்லுறவுகளைமேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

ருமேனியாவுடன் எண்ணெய் ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்வதுகுறித்து ஈரான் தற்போதுபேச்சு நடத்திவருகிறது. ஈரானுடன் கொள்வனவு செய்யும் எண்ணெய்க்கு ரொக்கப் பணம்வழங்கருமேனியாஇணக்கம் தெரிவித்ததையடுத்தே மேற்படி ஒப்பந்தம் குறித்து பேச்சு நடைபெற்றுவருகிறது. (இ)

## மதுவிலக்கு ரத்து

பாண்டிச்சேரி, ஏப். 24

பாண்டிச்சேரியில் இன்று வெள்ளிக்கிழமை முதல் மது மதுவிலக்கு ரத்துச்செய்யப்படுகிறது. (இ)

டியூட்டரி மாணவி கொலை:

# சந்தேக நபர்கள் இன்று மீண்டும் ஆஜர்

(புலோலி)

பொலிகண்டி டியூட்டரி மாணவி கொலை தொடர்பான சந்தேகநபர்கள் இருவரும் மீண்டும் இன்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்கள்.

கொலை செய்யப்பட்ட மாணவி கமலம் இராமச்சந்திரனின் ஒன்று விட்ட சகோதரனான ராம்குமார் (ராஜன்) அல்லது வீரப்பன், இவரது நண்பரான பொன்சியஸ் பெர்னாண்டோ ஆகிய இரு சந்தேக நபர்களும் பருத்தித்துறை நீதி மன்றத்தில் நீதவான் திரு.கே. எஸ். பகேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவார்கள்.

## மது அருந்துவதை அண்ணன் கண்டித்தார்; தம்பி தற்கொலை

(நெல்லியடி)

மதுவருந்தி வீண் செலவு செய்வதனைச் சகோதரர் கண்டிக்கவே, மனமுடைந்த வாலிபரொருவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்.

இச்சம்பவம் நெல்லியடியில் நடைபெற்றது. நாராயணசாமி சிவசுப்பிரமணியம் என்ற வாலிபரே இவ்வாறு மரணமடைந்தவராவர்.

இம்மரணம் சம்பந்தமான விசாரணை பருத்தித்துறைப் பதில்நீதவான் திரு. கே. கே பாலசுப்பிரமணியம் முன்னிலையில் நடைபெற்றது. பருத்தித்துறை பொலிசார் சாட்சிகளை ஆஜர்செய்தனர்.

மரணவிசாரணையின் போது காலஞ்சென்றவரின் சகோதரர் நா. வெற்றிவேலு கூறியதாவது:

காலஞ்சென்ற எனது சகோதரர் கடந்த 8 மாதங்களுக்கு முன்பு திருமணம் செய்திருந்தார். சம்பவதினத்திற்குமுதல் நாள், கடையில் சேர்ந்த பணத்தினை எடுத்துச்சென்று மதுவருந்திச் செலவழித்துவிட்டார். நெல்லியடியில் உள்ள எனது 'கூல்பாரை' அவரே நடத்திவந்தார். மதுவருந்தி பணம் செலவுசெய்ததனை அறிந்த நான் அவரைக் கண்டித்தேன். அவர் என் கண்டிப்பினால் மனமுடைந்திருந்தார்".

மற்றும் பலரின் சாட்சியங்களை பதிவுசெய்த பதில்நீதவான் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

---

## ஜெயபாலன் நினைவுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அல்வாய் வடக்கு மாளும்புலம் திடலில் எதிர்வரும் சனிக்கிழமை தீண்டாமை ஒழிப்பு போராட்டங்களில் முன்னின்று உழைத்த அமரர் என். ஜெயபாலன் நினைவாக நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சண்தலைமை) சார்பில் ஜனாப் எம். ஏ. சி. இக்பால் மக்கள் கலை இலக்கியப் பெருமன்றச் செயலாளர் திரு. வி. ரி. இளங்கோவன் திரு. கே செல்லத்துரை ஆகியோரும் மற்றும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப்பிரமுகர்களும் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவர். (கொ)

# வகுப்பு கலவரம் ஒழுங்கீனம் தூண்டுவோர் மீது நடவடிக்கை

## அஸாம் அரசு எச்சரிக்கை

கௌஹாத்தி, ஏப். 24

அஸாமில் வகுப்புக் கலவரங்களையும் ஒழுங்கீன நடவடிக்கைகளையும் தூண்டுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அஸாம் மாநில அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அஸாம் அசம்பாவித சம்பவங்கள் குறித்து மாநில அரசு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறியதாவது:

"அஸாமில் அரசியல் கொந்தளிப்புகள், கலவரங்கள் ஆகியவை இடம்பெற்றுவரும்சூழ்நிலையை சமூகவிரோத சக்திகளும் சுயநலமிகளும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அரசுவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நடவடிக்கைகளை இனிமேலும் அரசு பார்த்துக் கொண்டிராது." [இ]

## பதட்ட நிலை நீங்கியது

(நெல்லியடி)

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பகுதியில் இரு கிராமத்தவர்களிடையே நடைபெற்ற கோஷ்டி மோதல் காரணமாகத் தோன்றியிருந்த பதட்ட நிலைமை, சமரசத்தீர்வினை அடுத்து மறைந்து போய் விட்டது.

சமரசமாநாட்டை நடாத்தி அமைதியை ஏற்படுத்திய உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கமும், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்துவும் இச் சமரசத்தை ஏற்படுத்திவைத்தனர். (அ)

இந்திராவுக்கு கறுப்புக்கொடி காட்டிய

# கருணாநிதிமீதான வழக்கு: உரியகாலத்தில் பரிசீலனை

சென்னை, ஏப். 24

தி. மு. க. தலைவர் திரு மு. கருணாநிதிக்கு எதிராகபிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு கறுப்புக்கொடிகாட்டியதாகத் தொடரப்பட்ட வழக்கு குறித்து உரிய சமயத்தில் விசாரணை செய்யப்படும்.

இவ்வாறு இந்திய உள்துறை ஸ்டேட் அமைச்சர் திரு வெங்கட சுப்பையா தெரிவித்தார்.

1977ம் ஆண்டு திருமதி இந்திராகாந்தி கைது செய்யப்பட்டபோதும் 78ம் ஆண்டு திருமதி காந்தி எம். பி. பதவியை இழந்தபோதும் தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டம் நடத்தி கைதானவர்களுக்கு வழக்குகள் ரத்துச்செய்யப்படுமென்றும் திரு. வெங்கட சுப்பையா கூறினர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. நாராயணசுவாமிக்கு எதிரான வழக்குகளைக் கைவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினர் (இ)

## கன்பொல்லையில் காணிசுவீகரிப்பு

(நெல்லியடி)

கன் பொல்லை நவீன கிராமத்தில்வீடுகளை அமைப்பதற்காகக் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து 10 ஏக்கர் 1 றூட் 37 பேர்ச் நிலத்தினை நீதிமன்ற அனுசரணையுடன்சுவீகரித்தார்.

இந் நிலங்கள் சுவீகரிக்கப்பட்ட போது பருத்தித்துறை நீதிமன்றப் பதிவாளர் பிஸ்கால் உத்தியோகஸ்தர்கள், பொலிசார் ஆகியோரும் பிரசன்னமாயிருந்தனர். தேசிய வீடமைப்புத் திணைக்களத்தின் செயலாற்று முகாமையாளரும் இதில்கலந்து கொண்டார் (அ)

## கிறீஸ்தவ சேவா ஆசிரியர் சகாய நிதிச் சங்கம்

(அரியாலை)

கிறீஸ்தவ சேவா ஆசிரியர் சகாய நிதிச்சங்கத்தின் 25வது வருடாந்தக் கூட்டம் தலைவர் திரு. த சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

புதிய வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. த. சண்முகநாதன், உபதலைவர்கள்: திருவாளர்கள் எஸ். பி சிவானந்தம், எஸ். வேலாயுதபிள்ளை, செயலாளர்: திரு. எஸ். பி வில்வராசா, உப செயலாளர்: திரு இ சரசானந்தவேல் பொருளாளர்: திரு. ந சிவபாதம், நிர்வாக சபை உறுப்பினர்களாகத் திருவாளர்கள் ப. க. ஆறுமுகம், ஆ. இ. மனுவேல்பிள்ளை, த. துரைசிங்கம், ச இ. புண்ணியலிங்கம், சு விசுவலிங்கம், ஆர். யே. நவரத்தினம், ஆ. நடராசா, இ. சிவலிங்கம், வ. க. பாலசுப்பிரமணியம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

......

## நிதி ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

சில்லாலை கிழக்கு இலங்கை மாதா கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு மின்னொளி வழங்குவதற்கும், சுற்றுமதில் கட்டுவதற்கும் இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவின் சிபாரிசின் பிரகாரம் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கடன் உதவி

(பண்டத்தரிப்பு)

கொழும்பிலுள்ள கடன் வழங்கு சபைதிணைக்களம் யாழ் மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர் பிரிவு கடன் வழங்கு சபைக்கு அதன் உறுப்பினர்களுக்கு கடனாக வழங்குவதற்காக கடந்த வாரம் ஒரு லட்சம் ரூபாவை அனுப்பிவைத்திருப்பதாகமேற்படி கடன் வழங்குசபைச்செயலாளர் திரு. எஸ். சண்முகராஜன் தெரிவித்தார்.

தி. மு. க. - இ. காங். கூட்டணி

# தொகுதி உடன்பாடு: இன்று அல்லது நாளை இறுதி முடிவு

சென்னை, ஏப். 24

தமிழக சட்டசபைத் தேர்தலில் தி. மு. க-இந்திரா காங்கிரஸ் கூட்டணிக்கான தொகுதி உடன்பாடு 75 வீதம் பூர்த்தியாகிவிட்டது. மிகுதி தொகுதி ஒதுக்கீடு குறித்து இன்று அல்லது நாளை இறுதி முடிவெடுக்கப்படும்.

இவ்வாறு தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார்.

தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியத்துடன் 90 நிமிடங்கள் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து திரு. மு கருணாநிதி மேற்கண்டவாறு கூறினர்.

திரு. சுப்பிரமணியமும்மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

தி மு க-இந்திராகாங்கிரஸ் கூட்டணி [illegible] [illegible] 27 [illegible] போட்டியிடவிருக்கும் 21 டி மு.க. மகாநாட்டில் வெளியிடப்படுமென்றும்திரு. கருணாநிதி கூறினர்

இறுதிப்பட்டியல்தயாரிக்கப்பட்டதும் கட்சித்தலைமையின் பரிசீலனைக்காகஅப்பட்டியலைத் [illegible] பின்னரே அவ்விபரம் அறிவிக்கப்படுமென்று திரு சுப்பிரமணியம் தெரிவித்தார், (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ராதிகா-ஜெயச்சந்திரன் தர்மலிங்கம்-டிங்கிரி கனகரத்தினம்-V. R. நடராஜா
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக்கலர்)
டைரக்ஷன் : ஜோ தேவ் ஆனந்த்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தொலைபேசி: 466
தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30, 4-30, 7-15 10-30
சுதாகர்-ராதிகா- விஜயன்-ரதி
மற்றும் பலர் நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

ராஜா - (யாழ்நகர்) (சில தினங்கள் மட்டும்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-கவிதா-சந்திரமோகன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
சுஸ்ட்மன் வர்ணச் சித்திரம்

REGAL
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p. m. only
GEORGE SEGAL — GOLDIE HAWN
in
"THE DUCHESS AND THE DIRT WATER FOX"
ஹாஸ்யம் நிறைந்த சண்டைப் படம்
(Cinemascope—Color)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 3-30 6-30, 9-30
சிவாஜி-சரோஜாதேவி- எம். ஆர். ராதா நடித்த
பாகப் பிரிவினை

லிடோ (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் போன்: 7393
தேங்காய் சீனிவாசன்
உங்க வீட்டு கல்யாணம்

இன்று மட்டும்
ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த், மலேசியா சிவாஜி ராஜா, டன்குமார்
நடித்த
நெஞ்சுக்கு நீதி

From 26-4-80
Daily at 10-30, 2-30, 4-45, 7-15 & 9-45
NOBODY, BUT "NOBODY" KNOWS THE TROUBLE HE'S IN
HENRY FONDA — TERENCE HILL
in
My Name is Nobody
(Scope—Color)

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ASLI NAKLI அஸ்லி நக்லி
(ஹிந்தி)

SANTHI JAFFNA Phone 7642
Daily 10-30, 2-30, 4-45; 7-00 & 9-30 p.m.
MICHAEL SARRAZIN & URSULA ANDRESS in
THE LOVES AND TIMES OF
SCARAMOUCHE
Romance...Suspense...Thrill...Comedy
IN COLOR—MORE SUITED FOR ADULTS
COMING! "Shark's Treasure"
—in color—


# இன்றைய பலன்

சித்திரை மாதம் 13-ந்திகதி

(25-4-80) வெள்ளிக்கிழமை

மேடம்: புண்ணிய காரியங்களில் உற்சாகம் பிறக்கும், கவர்ச்சிகரமான தினம், பிள்ளைகளினால் பெருமைக்கிடமுண்டு, இல்லத்திலும் இனிமை நடக்கும்.

இடபம்: புதிய எண்ணங்கள் மலரும், தொழிலில் முன்னேற்றமுண்டு, சிலருக்கு இருப்பிடமாற்றமும் ஏற்படலாம், மகிழ்ச்சிகரமான நாள்.

மிதுனம்: அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடமுண்டு, வியாபாரத் துறையில் அதிக வருமானம் கிடைக்கும், பயன் தரக்கூடிய உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்படலாம்.

கடகம்: எதிலும் மந்தநிலை தென்படும், கடன் தொல்லை அதிகரிக்கலாம், தனிமையில் நாட்டம் செலுத்துவீர்கள், சிறிவரும் கோபத்தை அடக்கவும்.

சிங்கம்: குடும்பத்தில் சிறிய பூசல்கள் தலைதூக்கும், விஷமிகளின் புனைந்துரைகள் மனதுக்கு வேதனை தரும், ஆத்திரப்படுவதால் நண்பர்களைப் பகைத்துக்கொள்ள நேரிடும்.

கன்னி: சிலர் வாழ்க்கையில் தனிச் சிறப்பும் இடம் பெறலாம், நலன் தரும் சம்பவங்கள் நடக்கும், நலிவு சொல்லாமல் பறக்கும், சுபமான தினம்.

துலாம்: திடீர் நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலம் வருந்த நேரிடலாம், தூரத்துச் செய்திபொன்று உங்களை துயரத்தில் ஆழ்த்தும், பிணிக்கிடங்கொடாது இருக்கவும்.

விருச்சிகம்: வார்த்தை ஜாலம் செய்வதில் வல்லவராவீர், இனிக்கப்பேசி எதையும் சாதித்து விடுவீர்கள், புதிய நண்பர்கள் உங்களை உற்சாகப் படுத்துவார்கள், தாய்வழிச் சுகமும் உண்டு.

தனுசு: புத்திக்கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கும், புத்திரர்களால் புகழும் கிடைக்கும், இறை நம்பிக்கையுடன் இல்லத்தில் இனிமை தவழும்.

மகரம்: ஏமாற்றலின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள், பூமிப் பிணக்குகளால் கவலை தோன்றக்கூடும், தொழில் புரியும் இடத்தில் சூழ்ச்சிகள் உருவாகும், சிறு பிணிக்கும் இடமுண்டு, பொறுமை நன்று

கும்பம்: அன்பின் பிணைப்பு உங்களைப் பரவசத்தில் ஆழ்த்தும், களஸ்திர வழியால் கனிவான சம்பவங்கள் இடம் பெறும், வெளியிடத் தொடர்புகளிலும் நன்மையான மாற்றங்கள் உண்டு, மகிழ்ச்சிகரமான தினம்.

மீனம்: வாழ்க்கை ஒரு சுமைபாகத் தோன்றக்கூடும், கடன் தொல்லைகள் அதிகரிக்கும், நண்பர் ஒருவர் காலை வாரிவிடுவதற்கு முனையக்கூடும், சிந்தனையை ஒருவழிப் படுத்திச் செயலாற்றவும். சமாரான தினம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-ஜெய்சித்ரா
அக்கரைப் பச்சை
(புதிய பிரதி)

வெஸ்லி மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-லதா
ஊருக்கு உழைப்பவன்
(புதிய பிரதி)


# பூநகரியில் நடைபெறும் பொலிஸ்-பொதுமக்கள் விழா

(வேலணை)

பூநகரிப் பொலிசாரும், பொதுமக்களும் இணைந்து நடாத்தும் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலைவிழா நிகழ்ச்சிகள் ஆகியன எதிர்வரும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் பூநகரி கோட்டை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. சி. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்வைபவங்களில் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் திரு. பேர்சி விஜயசூரியா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. சந்திர ஜெயவர்த்தனா, பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜி. யு. எஸ். பி சாந்தசிறி ஆகியோர்கள் கலந்து கொள்வார்கள்.

விழா முடிவில் பஸ் போக்குவரத்து வசதி ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

## யாழ். பொலிஸ் கோஷ்டி வெற்றி

[யாழ்ப்பாணம்]

யாழ் பொலிஸ் தெரிவுக் கோஷ்டியினருக்கும், புத்தூர் வினஸ் கழகத்தினருக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் யாழ். பொலிஸ் தெரிவுக் கோஷ்டியினர் 3-1 கோல்களால் வெற்றியீட்டினர்.

புத்தூர் வினஸ் கழக மைதானத்தில் நடைபெற்ற மேற்படி உதைபந்தாட்டப் போட்டிக்கு திரு. திருஞான சம்பந்தன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவைப் பலப்படுத்துமுகமாக யாழ். பொலிஸ் அத்தியட்சகர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியாவினால் மேற்படி போட்டி ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது (கொ)

# 'உடல், உளவளர்ச்சிக்கு விளையாட்டு அவசியம்'

(அரியாலை)

உளவளர்ச்சிக்கும், உடல் வளர்ச்சிக்கும் விளையாட்டுப் போட்டிகள் அவசியமாகும். வைத்தீஸ்வர சனசமூக நிலையம் கிராம மக்களின் முன்னேற்றத்தை முதன்மையாகக் கொண்டு வருடா வருடம் விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருவது பாராட்டுக்குரியது. இப்போட்டிகள் மூலம் கிராம மக்களிடையே ஒற்றுமை ஏற்படுகிறது

இவ்வாறு உரும்பிராய் மேற்கு ஸ்ரீ வைத்தீஸ்வர சனசமூக நிலையத்தின் வருடாந்த உடற்பயிற்சிப் போட்டிக்கும் பிரதம விருந்தினராக் கலந்து கொண்ட வலி-கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். அம்பலவாணர் பேசுகையில் குறிப்பிட்டார்.

நிலையத் தலைவர் திரு. க தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற விழாவில் உதவி அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில் சமூக முன்னேற்றத்தை முதன்மையாகக் கொண்டு உழைத்து வரும் இச் சனசமூக நிலையத்திற்கு விளையாட்டு மைதானம் இல்லாத குறை மிகவும் நீண்டகாலமாக இருந்து வருவதை நான் அறிவேன். இக்குறையை கூடிய விரைவில் நீக்கி மைதானம் ஒன்றைப் பெற்றுத் தர ஆவன செய்வேன் என்று குறிப்பிட்டார்.

வடமாகாண உதவித் தேர்தல் ஆணையாளர் திரு. அ. ஜெயரத்தினம் பேசுகையில் விளையாட்டுப் போட்டிகளோடு மட்டும் நிற்காது சுயமரியாதையுள்ள மனிதர்களாக மக்கள் வாழ வேண்டுமென்ற குறிக்கோளுடன் எமது பிள்ளைகளுக்கு நாம் கல்வி கற்பிக்கக்கூடியவாய்ப்பிருந்தும் நாம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் கவனஞ் செலுத்தாவிட்டால் சமூகம் முன்னேற்றமடைய முடியாது என்றார்.

உரும்பிராய் பட்டினசபையின் முன்னாள் உறுப்பினர் திரு. ந அரியரத்தினம் சவசக்தி சனசமூக நிலையப் பிரதிநிதி திரு. க. அப்புத்துரை, திருக்குமரன், சனசமூக நிலையத்தலைவர் திரு. செ. குணரத்தினம் திரு சி அருளம்பலம், கிராமசேவையாளர் திரு. அ. க. த கிருஷ்ணசாமி ஆகியோரும் உரையாற்றினர்.

விளையாட்டுப் போட்டியில் கம்பர் இல்லம் 206 புள்ளிகளைப் பெற்றுச் சம்பியனாகியது. வள்ளுவர் இல்லம் 198 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றது

போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். அம்பலவாணர் வழங்கினார்

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதம குருவாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் வண சோமசுந்தர சிவாசாரியாருக்குக் காரைநகர் மக்களால் அளிக்கப்படும் பாராட்டுவிழா இன்று மாலை காரைநகர் முத்துமாரி அம்மன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. திரு. சி. கந்தையா தலைமையில் நடைபெறும் இப் பாராட்டு விழாவில் டாக்டர். ஆ. தர்மலிங்கம், சைவமணி வித்துவான் மு. சபாரத்தினம், கு. சிதம்பரநாதக் குருக்கள் வை. சுந்தரமூர்த்தி, க சிற்றம்பலம், க. மங்களேஸ்வரக் குருக்கள், கலாநிதி. வே. இராமகிருஷ்ணன், இ. பாலசுப்பிரமணிய ஐயர், பொ. நவரத்தினம் குருகுலபதி கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள், காரைநகர் பிரதமகுரு வண. சோமசுந்தர சிவகவாசியார், பண்டிதர் க. வேலாயுதபிள்ளை ஆகியோர் பாராட்டுரை வழங்குவர். (கொ அ)


ராஜகுமார் (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி - சுஜாதா
தீபம்
(கலர் - புதியபிரதி)


## யாருடையது?

தெல்லிப்பழை வரத்தலம் கற்பகப்பிள்ளையார் கோவில் குருக்கள் சிவஸ்ரீ இ. சபாரத்தினக்குருக்களால் வீதியில் கண்டெடுக்கப்பட்ட பெரியதம்பி சின்னத்துரை என்பவரது அடையாள அட்டை 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## வெற்றிபெற்ற இருசகோதரர்

(பண்டத்தரிப்பு)

சங்கானை பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுச் சங்கம் தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கடந்த வாரம் நடாத்திய விழாவில் இடம் பெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த சகோதரர்களான இ. இராஜேந்திரம்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷார்ப் போட்டோ
கொப்பியிங் சேர்விஸ்
(COPYING SERVICE)
சகல விதமான, அச்சு மற்றும் கையெழுத்துப் பத்திரங்களை குறைந்த செலவில், குறுகிய நேரத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட கருவி கத்தில் போட்டோ பிரதி செய்து கொடுக்கப்படும்.
SHARP PHOTO
10, கே. கே. எஸ். வீதி
சுன்னுகம்.
(சுன்னுகம் மக்கள் வங்கி முன்பாக)

ஈழநாடு The EELANAADU 50 சதம்

## இரவு 8-30 மணி வரை மேதினக் கூட்டங்கள்

(கொழும்பு)

எதிர்வரும் மேதினக் கூட்டங்கள் இரவு 8-30 மணிவரை மட்டுமே நடத்த அனுமதி வழங்கப்படும். பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற்கொண்டே பொலிஸ் ... ஸார் மேற்கண்ட உத்தரவை விடுத்துள்ளனர். [வெ]

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...

டில்கா வாச் வேக்ஸ்
- பஸ் நிலைய எதிர் மேல்மாடி -
404/1. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

SRI LANKA RECEIVED 1980-4-25 PERIODICALS DIVISION UNIVERSITY LIBRARY

# 1984ல் ஜனுதிபதிதேர்தலைபகிஷ்கரிக்கவேண்டும் அன்றேல் அதற்குள் தனிநாடு காணவேண்டும்

## "சுதந்திரக்கட்சி இனரீதியில் இயங்குகிறது" என்றும் கூறுகிருர் மாஜி மந்திரி 'சூரியர்'

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னுள் தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் புதிதாக ஓர் அரசியல் இயக்கத்தை ஆரம்பிக்கிருர். "அடிப்படையில் சோஷலிச கொள்கைகளைக் கொண்டதான இவ்வியக்கம், ஆரம்பத்தில் தமிழர் சார்ந்ததாக விருந்தாலும் இது ஓர் இனரீதியான இயக்கமாக இருக்க மாட்டாது. பொதுவாக விவசாய — தொழிலாளரிடையே இவ்வியக்கம் பரவலாக்கப்படும்" என்று கடந்த ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்ற கட்சியின் ஆரம்பக் கூட்டத்தில் திரு. குமாரசூரியர் கூறினுர்.

சிறிலங்காசுதந்திரக்கட்சியின் அண்மைக்காலப் போக்குகள் சில குறித்து வெளிப்படையாகவே கண்டித்து, சுதந்திரக் கட்சி அதன் இப்போதைய போக்கில் ஓர் இனவாதகட்சியாகவும் மாற்றமடையும் நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி சோஷலிச அமைப்பிலான குறிக்கோளை வைத்து இயங்காமையும், நாட்டின் இறைமையில் தமிழர் எப்படி பங்குபற்றுவது என்பதை இவ்வளவு காலமும் இது கூருமையும் தம்முடைய இம் முடிவுக்கு முக்கிய காரணம் என்றும் திரு. குமாரசூரியர் கருத்து வெளியிட்டார்.

கடந்த சுமார் மூன்று ஆண்டுக்காலப் பகுதியிலான இந் நாட்டின் அரசியல் நிலைமைகள், குறிப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் நிலை, தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார நிலை போன்றவற்ருேடு, 1984 இல் வரப்போகும் ஜனுதிபதி தேர்தல் நிலைமை யற்றியும் இக் கூட்டத்தில் முக்கியமாக முன்வைக்கப்பட்டது.

### சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேற்றப்படலாம்

18 ஆண்டுகளாக தான் அங்கம் வகித்து உழைத்த கட்சியின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்குப் புறம்பானதாக இப்படி நடந்துகொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதாகக் கூறிய திரு. குமாரசூரியர், இதனுல் தாம் கட்சியிலிருந்து விலக்கப்படலாமென்றும், ஆனல் கட்சியினுள்ளே அதன் சில போக்குகளைக் கண்டித்த நான், இப்போது வெளியிலும் சிலவற்றைக் கூறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதென்ருர்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசியலமைப்பின் கீழ் ஜனுதிபதித் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தமிழ்பேசும் மக்களின் பங்கும் இதில் முக்கியத்துவத்தைப் பெறுகிறது. அதனுல் இத் தேர்தலில் தமிழ்மக்களின் நடவடிக்கை சரியாக இட்டுச்செல்லப்படவேண்டும்.

### ஜனுதிபதி தேர்தலுக்கு முன் தனிநாடு அமைக்கவேண்டும்

ஜனுதிபதித் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகரை நிறுத்தமுடியாது. அது, எவராவது வேறு ஒருவரை ஆதரிக்கவேண்டும். இல்லையேல் ஜனுதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்கவேண்டும். அல்லாவிடில், அதற்கு முன் தனிநாட்டை அமைத்தாகவேண்டும்.

மக்கள் அளித்த தீர்ப்புக்கு மதிப்பளிக்கவேண்டும் என்பதால் இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக நாம் மௌனமாக இருந்தோம். ஆனல் இனியும் நாம் அப்படியிருந்துவிடமுடியாது.

### சுதந்திரக் கட்சிக்கு தமிழர் ஆதரவு கிடையாது

தமிழர் ஒருபோதும் சுதந்திரக்கட்சிக்குத் தங்கள் ஆதரவை அளிக்கமாட்டார்கள் என்று சுதந்திரக்கட்சி இப்போது உணர்கிறது.

எத்தனையோ நன்மையான விடயங்களைச் சுதந்திரக்கட்சி அரசு தமிழ்மக்களுக்குச் செய்த போது, அவ்வேளைகளில் வடபகுதி செல்லும் அமைச்சர்களுக்கு எதிராகக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டஞ்செய்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர், இன்று மக்கள் சாப்பாட்டுக்கு கஷ்டமுறும் வேளையிலும் அங்கு செல்லும் அமைச்சர்களைத் தமது வீடுகளுக்கு அழைத்து விருந்து கொடுக்கிருர்கள்.

சுதந்திரக்கட்சி தனது ஆட்சிக் காலத்தில் ஒரேயொரு பல்கலைக்கழகத்தைத் தான் அமைத்தது. அது யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டது. அப்பல்கலைக்கழகத்திற்காக 50 கோடி ரூபா செலவழிக்கப்பட்டது. நான் வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சராகவும் பதவி வகித்த ஆறு மாதகாலத்தில் 15 கோடி ரூபாவை அப்பல்கலைக்கழகத்திற்கு வழங்கியுள்ளேன். இன்று மூலைக்குமூலை பல்கலைக்கழகங்கள் நிறுவப்படும்வேளையில் மட்டக்களப்புக்கு ஒன்றை வழங்க அரசு தயாரில்லை

உணர்ச்சியைக் கட்ட விழ்த்துவிட்டுக் கூட்டணி பிரசாரம் செய்தது. அதன் பிரசாரத்திற்கு எதிராகப் பொய்கூறுது என்ன கலோசுத்தை நாம் முன்வைத்திருக்க முடியும்?

எனது மனைவிக்குக் கடந்த தேர்தலில் வாக்கு இருந்திருந்தால் கூட்டணியின் பிரசாரத்திற்கு எதிராக, எனது மனைவி கூட எனக்கு வாக்களித்திருப்பாரா என்பது சந்தேகமே! அப்படிப் பிரசாரஞ்செய்து வடபகுதியில் முழு ஸ்தானங்களையுமே கைப்பற்றியவர்கள் இன்று இளைஞர்களைத் தீவிரம் அடையவேண்டாம் என்கிருர்கள். தாங்கள் சிந்திக்காது தனிநாடு கோஷத்தை எழுப்பிவிட்டு, இப்போது இளைஞர்களைச் சிந்தித்துச் செயலாற்றுமாறு கூறுகிருர்கள்.

### தனிநாடு சாத்தியமல்ல

தனிநாடு சாத்தியமானதல்ல என்றுதான் நான் இன்றும் கூறுகிறேன். ஆனுலும் மக்கள் அளித்த தீர்ப்புக்கு மதிப்பு அளிக்கவேண்டிய கடமை இருந்ததால் இவ்வளவு காலமும் எதுவுமே பேசாதிருந்

[4ம் பக்கம் பார்க்க]

## கூட்டுறவுக் கல்வியைப் பரப்ப
## கல்வி உதவியாளர்கள் முன்வரவேண்டும்
### கருத்தரங்கில் ஆலால்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு இயக்கம் சாதாரண மக்கள் மத்தியிலேயே உருவாகவேண்டும். இதற்கு கூட்டுறவுக் கல்வி சகலருக்கும் அவசியம் போதிக்கப்படவேண்டும். இந்த நற்பணியில் கல்வி உதவியாளர்கள் தங்கள் கடமையைச் செய்ய முன்வர வேண்டும்.

இவ்வாறு யா. வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று ஆரம்பமான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கல்வி உதவியாளர்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்துப் பேசிய ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை யாழ் மாவட்டத்தலைவரும் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான திரு எம் ஆலாலசுந்தரம் கூறினுர்.

இக்கருத்தரங்கில் யாழ். மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், கல்வி உதவியாளர்கள், கூட்டுறவுத் திணைக்கள பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திரு. ஆலாலசுந்திரம் தொடர்ந்து பேசுகையில் கூட்டுறவுச் சங்கங்கள் லாபகரமாக இயங்குவதற்கு திட்டமிட்டு செயல் படுதல் அவசியம் இத்தகைய திட்டமிட்ட செயற் பாடுகளில் கூட்டுறவுக் கல்வியானது சாதாரண மக்களுக்கு மட்டுமல்லாது சங்கப் பணியாளர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் அவசியமாகும் இதைக் கல்வி உதவியாளர்கள் சிறப்பான முறையில் நிறைவேற்ற முன்வர வேண்டும் என்றும் கூறினுர்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் பேசுகையில் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளில் தெரிந்தோ தெரியாமலோ இடம்பெறும் சில தவறுகளை இத்தகைய கருத்தரங்குகள் நிவர்த்தி செய்து சங்கத்தை நல்லமுறையில் நிர்வகிக்க வழிவகுக்கும்.

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபைச் செயலாளர் திரு. ம. பத்மநாதர், கூட்டுறவுத் திணைக்கள தலைமைக்காரியாலய பரிசோதகர்கள் திருவாளர்கள் பீ. ஜே கனகசிங்கம், எம். எஸ் தர்மலிங்கம், கூட்டுறவு பரிசோதகர் திரு. கே. சற்குணலிங்கம் ஆகியோரும் கருத்துரைவழங்கினர். (இ)

மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்
உங்களை
திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல
மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால் பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! - சௌகரியமாக்குவது எங்களது!!

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ... யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்கு வீதி ... இலக்க அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 25-ம் திகதி வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the G.P.O. Sri Lanka under No. GB/694/78 The Eelanaadu, Post Box No. 49, Telegram: 'Eelanaadu' Phone 689